[Sri C. Subramaniam] [28th January 1956

that he will soon be restored to health and will be amongst us to give us the benefit of his counsel in resolving the difficult problems facing this State to-day.

MR. SPEAKER : The question is—

"That, under Rule 11 of the Madras Assembly Rules, leave of absence be granted by this House to Sri K. M. Seethi Sahib, till 15th April 1956, from the date of his absence."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) BILL, 1956—*cont.*

MR. SPEAKER : May I know when the Hon. the Minister will begin his reply?

THE HON. SRI M. A. MANICKAVELU : At one of the clock, Sir.

10-35 a.m. SRI V. MADANAGOPAL : நீண்ட நெடுங்காலமாக ஏற்கனவே வழக்கத்தில் இருந்து வந்த வார முறைகளை மாற்றிவிட்டு கடுமையான வார குத்தகை நிலவுகின்ற இன்றைய சூழ்நிலையில் சர்க்கார் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கக்கூடிய முறையில் ஒரு நியாய வார மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்பதோடு இந்த மசோதாவில் உள்ள பிரதான குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று கோருகிறேன்.

பொதுவாக இந்தியாவிலுள்ள இதர ராஜ்யங்களில் நிலச்சுவான்தார்களுடைய வாரப் பங்கு எந்த அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்கு சென்னை ராஜ்யத்தில் குறைக்கப்படாமல் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கக்கூடிய பங்கு அதிகமாக இருப்பதைப் பற்றி சர்க்கார் எவ்வித காரணமும் கூறவில்லை. சென்னை ராஜ்யத்தில் உள்ள நிலங்களில் அதிகமான விளைச்சல் கண்டு முதலாகிறது என்று பேசப் படுகிறது. குறிப்பாக பம்பாய் ராஜ்யத்தை விட சென்னை ராஜ்யத்தில் 16 சதவிகிதம் அதிக விளைச்சல் ஏற்படுகிறது. சென்னை ராஜ்யத்தில் விவசாயம் எந்த முறையில் நடத்தப்படுகிறது, விவசாயத்துக்கு எந்த அளவுக்கு உழைப்பு அதிகம் செலுத்தப்படுகிறது, நில விஸ்தீரணம் எவ்வளவு, விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மக்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்ற விஷயங்களை கணக்கில் எடுத்துக் கொண்டால், இதர ராஜ்யங்களை விட, இந்த ராஜ்யத்தில் சாகுபடியாளருக்குக் கிடைக்கக் கூடிய பங்கைக் குறைப்பதற்கு எந்த விதமான காரணமுமில்லை. விவசாய உற்பத்தியில் பாடுபடக்கூடிய விவசாய மக்களுக்கு நியாயமான பங்கு கிடைப்பதின் காரணமாக விவசாயம் மேன்மேலும் வளர்ச்சியுறும் நிலைமை ஏற்படுகிறது. தேசத்தில் வசிக்கக்கூடிய பெரும்பாலான விவசாய மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிப்பதின் மூலமாகவும் உள் நாட்டு மார்க்கட்டை விஸ்தரிப்பதின் மூலமாகவும்தான் தேசத்தில் தங்கு தடையின்றி வெகு துரிதமாக ஒரு தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும். ஆகவே மிராசுதார்களை பாதிக்கப்போகிறது என்ற விஷயத்தைப் பொருட்படுத்தாமல் பெரும்பாலான மக்களுடைய நலனையும் தேசத்தின் பொது நலத்தையும் மனதில் கொண்டு அந்த அடிப்படையில் இந்த மசோதாவைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

28th January 1956] [Sri V. Madanagopal]

இந்த மசோதாவில் அறுவடைக் கூலியை சாகுபடியாளர் பங்கிலிருந்து கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் பல நூற்றுண்டுகளாக அறுவடைக் கூலியை நிலச்சுவான்தாரும், சாகுபடியாளரும் பாதி பாதியாக பிரித்துக்கொண்டு வருகிறார்கள். இன்றைக்கும் அவ்விதமே தான் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அறுவடைக் கூலியை சாகுபடியாளர் பங்கிலிருந்து கொடுக்கவேண்டுமென்று இந்த மசோதா நிர்ணயிப்பது விவசாயிகளுக்கு அலது கையால் நன்மையைக் கொடுத்துவிட்டு இடது கையில் பிடுங்கிக் கொள்வது போன்றிருக்கிறது. நெல் பயிருக்கு 12½ சத விகிதம் அறுவடைக் கூலியாகிறது. கடலை போன்ற பயிருக்கு 10 சத விகிதம் அறுவடைக் கூலி ஆகிறது. புஞ்சைப் பயயிர்களுக்கு அறுவடைக் கூலி 10 சத விகிதத்திலிருந்து 20 சத விகிதம் வரை ஆகிறது. ஆகவே சாகுபடியாளர் பங்கிலிருந்து அறுவடைக் கூலி கொடுக்கவேண்டுமென்று சொல்லி அவர்களுக்கு 60 சதவிகிதம் வாரம் நிர்ணயித்திருப்பது, சரி வாரத்தை உறுதிப்படுத்துவதாகத்தான் இருக்கிறது. ஆகவே, நிச்சயமாக சர்க்கார், அறுவடைக் கூலி நிலச்சுவான்தாருக்கும் சாகுபடியாளருக்கும் பாதி பாதி என்று பழக்கத்திலிருக்கிற முறையில் இந்த மசோதாவை திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புஞ்சைத் தோட்டங்களில் இரைத்து விவசாயம் செய்வதால் சாகுபடியாளருக்கு ஏற்படக்கூடிய சாகுபடிச் செலவை சர்க்கார் சரியாக கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இந்த மசோதாவில் சில விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரவைத் தோட்டங்களுக்கு நஞ்சை போன்று எப்பொழுதும் நிரந்தரமான தண்ணீர் வசதி கிடையாது. தமிழ் நாட்டில் பெருவாரியாக இருக்கக்கூடிய கடலை முதலியவை பயிர் செய்யப்படும் புஞ்சைத் தோட்டங்களில் வருஷத்தில் 4 மாதம் 6 மாதம் தண்ணீர் இரைப்பதன் காரணமாக சாகுபடிச் செலவு அதிகமாகிறது. புஞ்சை இரைப்புத் தோட்டங்களுக்கு நஞ்சைக்கு ஆகும் சாகுபடிச் செலவைப் போல், 50 சத விகிதம் அதிகச் செலவு ஆகிறது. நஞ்சைக்கு ஒரு ஏகருக்கு 200 ரூபாய் சாகுபடிச் செலவானால், தண்ணீர் இரைத்து எடுத்தால் ஒரு ஏகருக்கு 300 ரூபாய் செலவாகிறது. ஆகவே, புஞ்சைத் தோட்டங்களைப் பொறுத்த வரை, சாகுபடியாளருக்கு 75 சத விகிதம் நிலச்சுவான்தாருக்கு 25 சத விகிதம் வாரம் என்ற முறையிலே இந்த மசோதாவைத் திருத்த வேண்டும்.

அடுத்தபடியாக, மானவாரி புஞ்சைக் காடுகள், இருபோக நஞ்சை, ஒரு போக நஞ்சை எல்லாவற்றையும் சேர்த்து ஒரே நிலையில் வைத்து வாரத்தை 60, 40 என்று நிர்ணயித்திருப்பது மிகவும் அநியாயமானது என்று குறிப்பிப் பிரியப்படுகிறேன். நஞ்சை நிலங்களில் எவ்வளவு குறைந்து விளைந்தாலும்கூட ஒரு நிரந்தர விவாசயத்துக்கு உறுதி உண்டு. நஞ்சையில் 6 மாதங்களிலிருந்து 9 மாதங்கள் வரையிலும் விவசாயிகள் அந்த நிலத்தை நம்பி வாழ முடியும். ஒரு போக மானவாரி புஞ்சைக் காடுகளில் சுமார் 90 நாட்களுக்குத் தான் விவசாயம் செய்ய முடியும். மானவாரி புஞ்சைக் காடுகளில் விவசாயம் நிச்சயமற்றது. மழை தவறிவிட்டால், பயிருக்கு சீக்கு ஏற்பட்டால், கம்பளிப்பூச்சி பயிரை அறித்து விட்டால், விதைக்குக்கூட மகசூல் எடுக்கப்பட முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். புஞ்சை நிலத்தில் 4 ஏக்கர் இருந்தால் அதில் ஒரு ஏக்கர் மேட்டு நிலமாய் இருக்கும். புஞ்சை நிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு, அதாவது 66-2/3 சத விகிதம் சாகுபடியாளருக்கு வாரம் கிடைக்க வேண்டுமென்ற முறையில், இந்த மசோதாவை திருத்த வேண்டும்.

தவிர, மசோதாவில் இருக்கக்கூடிய சில விதிகள் குழப்பம் விளைவிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. நேற்றைய தினம் கனம் மந்திரி அவர்கள் பேசும்பொழுது, தற்பொழுது 40 சத விகிதத்துக்குக் கீழாக வாரம் அமுலில் இருந்தால் இந்தச் சட்டம் வருவதின் காரணமாக அது பாதிக்கப்படமாட்டாது என்று கூறினார்கள். இந்த மசோதாவின் முன் பகுதியில் அப்படித்தான் கூறியிருக்கிறது. ஆனால் மசோதாவின் பிற்பகுதியில், இருதரப்பாருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தாலும், யார் வேண்டுமானாலும் நியாய வாரத்தை நிச்சயிக்கும்படியாக ரெண்ட் கோர்ட்

[Sri V. Madanagopal] [28th January 1956

டுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று ஒரு விதி இருக்கிறது. ஆகையால், இது விஷயமாக மசோதாவில் வேண்டிய திருத்தங்களைச் செய்யவேண்டும்.

குறிப்பிட்ட நிலம் இருபோக நஞ்சையா ஒரு போக நஞ்சையா அல்லது புஞ்சையா அல்லது தோட்ட நிலமா என்பதைப் பற்றி வார நிர்ணயக் கோர்ட்டுகளில் பிரச்னை எழுந்தால் அரசாங்க ரெஜிஸ்டர்களில் அந்த நில சம்பந்தமாக அனுசரிக்கப்பட்டுள்ள தரப் பிரிவினையை ஒட்டி முடிவு செய்யப்படும் என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் பலவிதமான சிக்கலான நிலைமைகள் ஏற்படும். ஒரு காலத்தில் நஞ்சையாக இருந்த நிலம் இன்றைக்கு நடைமுறையில் புஞ்சையாக இருக்கலாம். குறிப்பாக ஜமீன் இனம் பிரதேசங்களில் கண்மாய்கள் தூர்ந்துவிட்டதன் காரணமாக நஞ்சையாக இருந்த நிலங்கள் இன்று புஞ்சையாக இருக்கிறது. இதேமாதிரி புஞ்சைக்காடுகளும் தோட்டங்களும் இருக்கின்றன. ஆகவே "ரெஜிஸ்டரைப் பார்த்து" என்பதற்குப் பதிலாக நடைமுறையில் நஞ்சையாக இருக்கிறதா, புஞ்சையாக இருக்கிறதா என்று கவனித்து அதன்படி நிர்ணயம் செய்யவேண்டும்.

10-44 a.m. இதைத் தவிர, இந்த மசோதா இன்னும் இரண்டு மாதங்களில், அதாவது ஏப்ரல் மாதம் முதல் தேதியில் சட்டமாக அமுலுக்குவரும் என்று கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக இது போன்ற மசோதாக்களைக் காலம் கடத்துவதன் காரணமாக நிலச்சுவான்தார்கள் வரப்போகும் சட்டத்தினுடைய பலனை விவசாயிகள் பெரும்பாலும் அடையமுடியாதவாறு செய்வதற்கு என்ன என்ன முறைகளையெல்லாம் கையாள முடியுமோ அவைகளையெல்லாம் கையாண்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நியாய வார மசோதா எந்த நோக்கத்துடன் கொண்டுவரப்படுகிறதோ அந்த நோக்கம் நடைமுறையில் நிறைவேறாத நிலைமை தான் ஏற்படும். இன்றைக்கு தமிழ் நாட்டில் உள்ள வாரத்திற்கு சாகுபடி செய்யும் விவசாயிகளில் 99 சத விகிதத்தினரிடம் எந்த விதமான ரிக்கார்டும் கிடையாது. ஆனால் இந்த நிலச்சுவான்தார்கள் அவர்களிடத்திலிருந்து இவ்வளவு ரூபாய் குத்தகையாகத் தரவேண்டும் என்பதை மட்டும் எழுதி வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் சாகுபடியாளர்கள் இவ்வளவு குத்தகை கொடுக்கிறார்கள் என்பதற்கு எந்த விதமான பதில் சீட்டும் நிலச்சுவான்தார்கள் அவர்களுக்கு கொடுப்பது கிடையாது; அதே போல் வார சாகுபடியிலும், "இத்தனை மூட்டை பெற்றுக்கொண்டேன்" என்பதற்கு வாரம்தாரிடம் எந்தவிதமான ரசீதும் கொடுப்பது கிடையாது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் கர்ணம் கணக்கிலும், "என் சொந்தப்பண்ணையாக இருக்கிறது" என்றுதான் அவர்கள் கணக்குக்கொடுத்திருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிலைமையில், வரக்கூடிய சட்டம் விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டுமானால், நிலத்தில் உண்மையாக யார் சாகுபடி செய்கிறார் என்பது பற்றி கர்ணத்தின் மூலம் கண்டிப்பான கணக்கெடுப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் கட்டாயம் செய்யவேண்டும். சாகுபடி செய்கின்ற விவசாயிகள் "நாங்கள் இன்னாருடைய நிலத்தை விவசாயம் செய்கிறோம்" என்று கலெக்டரிடமோ ரெவினியூ இன்ஸ்பெக்டரிடமோ மனுக்கொடுத்தால் பதிந்து வைத்துக் கொள்வதற்கு ரெஜிஸ்டர் வேண்டும். அப்படியில்லையென்றால் 90 சத விகித விவசாயிகள் வரப்போகும் சட்டத்தின் பயனை அனுபவிக்கமுடியாத நிலைமை தான் ஏற்படும். சர்க்கார் இதில் கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் இந்த சபையில் பேசுகிறபோதும் வெளியில் நிலச்சுவான்தார்கள் கூட்டத்திலும் ஒரு பெரிய கோஷம் கிளப்பப்படுகிறது. அதாவது ஏற்கனவே தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தில் அளித்திருக்கக்கூடிய நியாயத்தை இவர்களுக்கும் வழங்கவேண்டும் என்பது தான். தஞ்சாவூர் பண்ணையாட்கள்சட்டத்தில் 6½ ஏக்கர் நஞ்சை நிலமும், 20 ஏக்கர் புஞ்சை நிலமும் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு விலக்களித்திருக்கிறார்களாம். அதேமாதிரி விலக்களிக்கவேண்டும் என்று இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நல்ல வேளையாக மசோதா அப்படிப்பட்ட முறையில் இல்லை என்பது வரவேற்கத் தக்க ஒரு அம்சம். ஆனால் மீண்டும்

28th January 1956] [Sri V. Madanagopal]

செலக்ட் கமிட்டிக்குப் போகக்கூடிய காலத்தில் அந்த மாதிரியாக சிறிய மிராசுதார்களுக்கு சலுகை யளிக்கும் முறையில் சர்க்கார் யோசனை செய்வார்களேயானால், மிக மோசமான நிலையை ஏற்படும் ; ஏனென்றால், தமிழ் நாடு முழுவதும் பெரும்பாலும் சிறிய மிராசுதார்களைக் கொண்டிருக்கிறது ; 6-2/3 ஏக்கருக்கு உட்பட்ட நஞ்சை நிலமும், 20 ஏக்கருக்கு உட்பட்ட புஞ்சை நிலமும் கொண்ட இந்த சிறிய மிராசுதார்கள் தங்களிடம் வாரத்திற்குச் சாகுபடி செய்து கொண்டிருக்கும் விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்றுவார்கள். இந்த விஷயத்தை சர்க்கார் கவனிப்பதோடு, சிறிய நிலச்சுவான்தார்களைப் பொருத்தவரையிலும் அவர்களுடைய நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். "வலிங்" ஏற்படக்கூடிய காலத்திலே, நிலத்தை நஷ்ட ஈடு கொடுத்தோ கொடுக்காமலோ எடுத்துக்கொள்ளும் காலத்திலே, சிறிய மிராசுதார்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்பது அவசியம் தான். ஆனால் குத்தகைக்காரர்களுக்கு நியாயமான பங்கு கொடுக்கப்படவேண்டும் என்ற விஷயத்தைப் பற்றி கவனிக்கும்போது இந்த சிறிய மிராசுதார்களுக்குச் சலுகை வழங்கவேண்டியது அவசியம் இல்லை ; ஏனென்றால் கிராமப்புறங்களில் உள்ள வாரத்திற்கோ, குத்தகைக்கோ விட்டிருக்கும் சிறிய நிலச்சுவான்தாரர்கள் வேறு பல தொழில்கள் செய்து வருமானம் பெற்றுவருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று சொல்வது சாகுபடியாளர்களை பாதிக்கும். ஆகவே இந்த யோசனையைக் கைவிட்டுவிட வேண்டும்.

அடுத்தபடியாக, கலெக்டர் விலை நிர்ணயிப்பதைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயத்தில் சர்க்கார் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். நான் சொல்லப்போகும் விஷயம் மிகச் சிறிய விஷயமாக இருந்தாலும் மிகப்பெரிய அளவில் விவசாயியை பாதிக்கும். அறுவடை காலத்துக்கு மூன்று மாதத்திற்கு முன்பு கலெக்டர் பொருள்களின் விலையை நிர்ணயித்துக் கூறுவார் என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அறுவடைக்கு மூன்று மாதத்திற்கு முன்புள்ள அந்தக் காலத்தில் தான் ஒவ்வொரு விவசாயப் பொருளின் விலையும் மிகவும் ஏறியிருக்கக் கூடிய காலம். ஆகவே அப்போது நிர்ணயிக்கப்படுகிற விலை மதிப்புக் கேற்ப மகசூல் பங்கை பொருளாகக் கொடுப்பதென்றாலும், பணமாகக் கொடுப்பதென்றாலும், அது விவசாயிகளை மிகவும் பாதிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அறுவடை நடக்கக்கூடிய 6 வார, 8 வார காலத்திலேயே கலெக்டர் விலை மதிப்பை நிர்ணயிக்க வேண்டும் என்று விதி வகுக்கவேண்டும்.

இது தவிர ஊடு பயிரைப் பற்றியும் ஒரு பிரச்னை இருக்கிறது. இது மிகச் சிக்கலான விஷயம். இதில் ஒருபோகம், இருபோகம் விளையும் நஞ்சை நிலங்களில் உள்ள ஊடு பயிரா, அல்லது புஞ்சைக் காட்டில் இருக்கக்கூடிய ஊடு பயிரா என்ற சந்தேகம் எழுகிறது. நஞ்சை நிலங்கள் என்றிருந்தால் சரிதான். ஆனால் புஞ்சை நிலங்களில் கடலை, பருத்தி முதலியவை பயிரிடுகிறார்கள். கடலை சாகுபடி செய்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு பருத்தி மகசூல் கிடைக்கும். இதில் எது ஊடு பயிர், எது பிரதான பயிர் என்பது பற்றி விளக்கம் தேவை. வாரத்தையோ குத்தகையையோ நிர்ணயிக்கும்போது பிரதான பயிராக ஒன்றோ இரண்டோ கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ஒரு 4 ஏக்கர் நிலத்தில் ஒரு ஏக்கரில் மிளகாயும், ஒரு ஏக்கரில் புகையிலையும், ½ ஏக்கரில் ஈர வெங்காயமும், மீதியுள்ள ஏக்கரில் வேறு சில பொருள்களும் பயிர் செய்கிறார்கள். இம்மாதிரி இடங்களில் எந்தப் பயிரைத் பிரதான பயிராகக் கணக்கில் எடுத்துக் கொள்வது என்ற சந்தேகம் எழுகிறது. இப்படிப்பட்ட இடங்களில் மூன்று சாகுபடி செய்யப் பட்டு வந்திருக்கும் பயிர், மூன்று கிடைத்த மகசூலின் அளவு, மூன்று கிடைத்த வருமானம் முதலியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். தவிர சில இடங்களில் ஒரே ஏக்கரில் மூன்று, நான்கு பொருள்களைப் பயிரிடுகிறார்கள். இம்மாதிரி இடங்களில் பிரதானப் பயிர் எது என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் போது விவசாயிகளுக்கு பாதகம் விளையும்.

[Sri V. Madanagopal] [28th January 1956

மேலும் கோர்ட் விஷயமாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது சம்பந்தமாக, நில வெளியேற்றச் சட்டத்தில் விவசாயிகளும் வக்கில் வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயிகளின் பிரதிநிதிகள் வாதாடலாம் என்று தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கின்ற முறை அமுலில் இல்லை ; ஏனென்றால் வெளியேற்றப்பட்ட யாரும் வாதாடுவது என்பது நடை முறையில் சாத்தியமாக இல்லை.

மேலும், இந்த மசோதா சம்பந்தப்பட்ட வரையில், தமிழ் பாஷை அரசாங்க மொழியாகக் கொண்டு வரப்பட வேண்டும் என்று எவ்வளவோ பேச்சுப் பேசினாலும், தமிழ் பாஷையில் மொழி பெயர்ப்புக் கொடுக்கப்படவில்லை. சமீபத்தில் லேவாதேவி சம்பந்தப்பட்ட மசோதா வந்த போது கூட அதற்கு தமிழ் மொழி பெயர்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த மசோதாவிற்கு கொடுக்கப்பட வில்லை. இந்த சபையில் பலர் தமிழில் பேசுபவர்கள். குறிப்பாக விவசாயம் சம்பந்தப்பட்ட மசோதா இது. தமிழ் மொழி பெயர்ப்பு கொடுக்கப்படாததால் மெம்பர்கள் கூர்ந்து கவனித்து ஆலோசனை கொடுக்க முடிய வில்லை. மேலும் மசோதா கூறுகின்ற விஷயத்தை ஒரு தனிப் பிரசுரமாக்கி அதிகமான பிரதிகளை சாதாரண ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டு மென்று கூறிக் கொள்கிறேன்.

தென்னை மரம், புளிய மரம் முதலிய மரங்கள் சாகுபடி நிலத்தில் இருந்தால் அது யாரைச் சேர்ந்த தென்று தெரியவில்லை. விவசாயி, நிலச் சுவான்தார் இவர்களில் ஒவ்வொருவரும் தன்னைச் சேர்ந்ததென்று சொல்லிக் கொள்ளலாம். ஆகவே யாரைச் சேர்ந்ததென்று சர்க்கார் விளக்கம் தரவேண்டும்.

மேலும், சாகுபடியாளர் அஜாக்கரதையாக இருந்தால் . . . என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. சாகுபடியாளர் ஒரு நாளும் நிலத்தை இடிப்பதில் (நாசம் செய்வதில்) ஈடுபடுவதில்லை. ஆகவே மசோதாவில் இப்படிச் சொல்லியிருப்பது பல விதமான சிக்கல்களை ஏற்படுத்தும். ஆகவே அந்த வாசகத்தை மசோதாவினின்றும் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டிக்கு வரும்போது தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்து சாகுபடியாளருக்கு அதிகப் பங்கு கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The time-limit for each hon. Member is reduced from 15 to 10 minutes. Sri V. K. Ramaswami Mudaliar may now speak.

10-52 a.m. * SRI V. K. RAMASWAMI MUDALIAR : Mr. Deputy Speaker, Sir, the Land Reforms Bill and the Fair Rent Bill are the two things that are seriously engaging the attention of the public. I have been from the very beginning saying that the Government should come forward and pay some sort of compensation by taking over all lands in the State and then deal with them as they please. They may let it out to the tenants on a fair rent basis or give the lands to the landless poor.

I am not championing the cause of big landlords or anybody. But my only contention is the Government should give up this step-motherly treatment because the landlords are also entitled to some kind of protection under the Constitution. That is my plea and the Government also should recognise that the land-owner

28th January 1956] [Sri V. K. Ramaswami Mudaliar]

is a person who has invested money by paying such huge sums of money and investing his savings on the land. Therefore I consider that any far reaching changes that are contemplated in the Bill will lead to complications. My contention is that it is very unfair and arbitrary.

Apart from other things, the steep fall in prices in the last two years has considerably affected the small land-owners, not to speak of other big people. For instance take a land-owner who pays about Rs. 1,000 as kist to Government. According to the 1955 Act, which we recently passed, he has to shell out 8 annas per rupee and again for district board cess another 2 annas in the rupee. That comes to 10 annas in the rupee. Coupled with road and education cess, it comes in all to 15 annas in the rupee. Therefore he pays much more than an income-tax assessee. I fail to understand how he can maintain his livelihood and be in a position to make both ends meet. Then again the vagaries of monsoon and other things are there. That is why I am pleading from the beginning that the Tanjore Tenants and Pannaiyal Protection Act should be extended to other districts or the Tamilnad Congress Committee's report should be accepted *in toto*. The Tamilnad Congress Committee's report is a fair one. They have been touring from district to district and meeting all the cultivating tenants and also some mirasdars. They have elicited the opinion of both cultivating tenants and the mirasdars and have prepared a very comprehensive report, which would be acceptable both to the cultivating tenants and also to the mirasdars to some extent. I think even the Communist friends on the other side would not have thought of this kind of sweeping legislation because I know very well that they were hoping for only about 50 per cent share for the tenants. Now according to this Bill, the cultivating tenants would get 60 per cent while the landlord would get only 40 per cent. Even with this 60 per cent share for the tenants, the Communists say they are not satisfied. I do not know how they are justified in coming to this conclusion without eliciting public opinion.

Some reduction in rent is also provided for in lands where water is baled by means of a pumpset installed at the cost of the landowner. The Subramanyam Committee referred to the long existing practice of fixing rent based on the fertility of land. Take the case of Chingleput and other dry districts. Government are aware that the owners of land have expended such a lot of money either by way of reclamation or sinking of wells. But what is the contribution made by the tenants? Therefore some provision must be made by which there should be some equal distribution of waram. In my district of Chingleput, the lands vary in the same village. There is so much disparity between one class of land and another. It varies from village to village and from district to district. In the State there are so many varieties of land that it will not be possible to fix a uniform percentage of 60 per cent of the produce as the share for the tenants. My plea is

that Government should consider seriously this question and pay something reasonable which will be acceptable to the owners of land.

By one stroke of the pen, the Government have provided in the Bill that the landlord should not be entitled to any straw. This will put the small land-owners who are maintaining some cows, to a great difficulty. They are in need of straw. Even the cultivating tenants are in a position to give them some straw very willingly. When such is the case, it is not known how the Government came to the conclusion that the landlords should not be given any straw. There is a Tamil proverb which says :

"நெல் காய்ச்சி மரம் என்று சொல்லுகிறவர்கள் வியாதிக்கு வைத்தியம் செய்தால் இப்படித்தான் இருக்கும்."

I entirely agree that this legislation is a hasty one. Government have not come to just conclusions in assessing the waram.

In one place they have given exemption to betels, vines, etc. In the Tenants Protection Bill, it is said that tenants should not be evicted. I do not know how this will be applicable to that. According to that Act, he cannot be evicted. The Bill makes no mention of resumption for self-cultivation. That is another drawback. Supposing there is a small landholder who has a small tenant. He must be given some protection to resume that land and cultivate it personally. So, these are some of the defects which I have to point out.

Further, there is also another thing. If this Bill as it has emanated from the Government is passed, the land-owner will be reduced to a state of functionless rent receiver. I would therefore request the Government in all seriousness to constitute an Expert Committee which will consist of representatives of the tenants and the landlords, to thrash out this question and go into the details of the whole matter and render justice to the mirasdars who are really hard hit.

11 a.m. **Sri M. PALANIYANDI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலாவதாக இந்த மசோதாவைக் கொண்டு வந்த கனம் ரெவின்யு அமைச்சர் அவர்களை நான் போற்றுகிறேன். நான்கு ஆண்டுகளாக, ஏழை விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு சட்டம் கொண்டு வர வேண்டு மென்று இந்த சபையில் பல தடவை பல அங்கத்தினர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் கூட, காங்கிரஸ் கட்சியிலுள்ள ஸ்ரீ கருத்திருமன் போன்ற சில அங்கத்தினர்கள் இந்த மசோதாவை எதிர்த்திருந்தாலும் கூட, நல்ல தொரு சட்டம் கொண்டு வர வேண்டு மென்று சர்க்காருக்கு எண்ணம் இருந்து வருவதை நான் பாராட்டுகிறேன். நண்பர் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் "இந்த மசோதா சூர்ப்பணகையாக இருந்து காமவல்லியாக மாறுவது எப்படி?" என்று ஏதோ சொன்னார்கள். ஆனால் கட்சியான காங்கிரஸ் கட்சியிலுள்ள சில அங்கத்தினர்கள் கூட இந்த மசோதாவை எதிர்த்துப் பேசினார்கள். எதிர் கட்சியிலுள்ள நான் கூட நாடு சுதந்திரம் பெற்ற போது காங்கிரஸ் ஊழியனாக இருந்தேன். அந்தக் காலத்தில், நாட்டிலுள்ள விவசாயிகளும் தொழிலாளர்களும் நல்வாழ்வு வாழ வேண்டு மென்பதற்காக விவசாய இயக்கங்களிலும் தொழிலாளர்களின் இயக்கங்களிலும் காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டார்கள். அன்று நடந்த அந்த காங்கிரஸ் இயக்கத்தில் எல்லோரும் அடித்து நொறுக்கப்பட்டு சிறையில் தள்ளப்

28th January 1956] [Sri M. Palaniyandi]

பட்டார்கள். ஆகவே பல ஆண்டுகள் நடந்த போராட்டத்திற்குப் பிறகு சட்டம் வர விருக்கிறது. இப்போது சிலர் வரப்போகும் நல்லதொரு சட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்கிறார்கள். இதைக் கண்டு சட்ட சபையில் எதிர் கட்சியிலுள்ளவர்களோ, நாட்டிலுள்ள மற்ற விவசாய மக்களோ பயந்து விட மாட்டார்கள். ஆண்டாண்டுதோறும் விவசாயத் தொழிலில் ஈடு பட்டு வரும் விவசாய மக்கள் சரியான வருமானமோ, கூலியோ இல்லாமல் நசித்துக் கிடக்கிறார்கள். ஆகவே அவர்களை நிமிர்த்திவிட வேண்டிய நிலைமையில் நாம் இன்றைக்கு இருக்கிறோம்.

திட்டக் கமிஷன் என்ன சொல்லுகிறார்கள்? நூற்றுக்கு 75½ வாரம் சாகுபடியாளருக்குக் கொடுக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் சாகுபடிச் செலவு, அறுவடைச் செலவு ஆகிய எல்லாவற்றையும் சாகுபடியாளர் ஒத்துக் கொள்ள வேண்டு மென்று சொல்லி மொத்தத்தில் 60 சத விகிதம் வாரம் சாகுபடியாளருக்குக் கொடுக்க வேண்டு மென்று சொல்லுகிறோம். ஆகவே கடைசியில் பார்த்தால் நிலச் சுவாந்தாருக்கும், சாகுபடியாளருக்கும் சரிக்குச் சரி தான் கிடைக்கும். சாகுபடியாளருக்கு 50 சத விகிதத்துக்கு கொஞ்சம் குறைந்தாலும் குறையும். ஆகையால் இதை நியாய வார மசோதா என்று நாம் சொல்ல முடியாது. இதனால் விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை ஏற்படலாமே தவிர பெரும்பாலான நன்மையை விளைவிக்க முடியாது. ஆகவே தான் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, இனியும் காலதாமதம் செய்வதை விட ஸ்ரீ ராமலிங்கம் அவர்கள் சொன்னதைப் போல உடனடியாக சபையில் விவாதித்துச் சட்டமாக்கியிருக்கலாம். ஆனால் ஒன்றே ஒன்று. பொறுக்குக் கமிட்டியில் சாகுபடியாளருக்கு நன்மை ஏற்படக் கூடிய வகையில் சட்டத்தில் எந்த விதமான புது மாறுதலும் செய்யா விட்டாலும் கூட இருக்கிற கொஞ்ச நஞ்ச நன்மையும் போய்விடக் கூடிய வகையில் எதுவும் மாறுதல் செய்யாமலிருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக இந்தச் சட்டத்தில் 6-2/3 ஏக்கருக்குக் குறைவாகவுள்ள நிலச் சொந்தக்காரருக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்கிறார்கள். இம்மாதிரியாக விதிவிலக்கு அளிப்பது சரியல்ல. இந்தச் சட்டத்தினால் பெரும் பகுதி விவசாய மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டு மென்றால் எந்த விதமான விதி விலக்கும் அளிக்கப்படக் கூடாது.

அடுத்தப்படியாக ஒருவர் இவ்வளவு நிலம் தான் சாகுபடிக்குச் சொந்தமாகவோ, குத்தகைக்கோ எடுத்து வைத்துக் கொள்ளலாம் என்று வரம்பு கட்டியாக வேண்டும். ஒருவரே நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர நிலங்களைச் சாகுபடிக்கு வைத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. ஒருவர் இவ்வளவு தான் நிலம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று வரம்பு கட்ட வேண்டு மென்றும் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும். விவசாயக் கூலி நிர்ணயிக்கப்படாத வரையில் சாகுபடியாளருக்கு நன்மை செய்ததாக ஆகாது. மினிமம் வேஜஸ் ஆக்ட் கமிட்டியில் நானும் ஒரு மெம்பர்தான். எப்படி நாம் நிலத்திற்கு வாரம் நிர்ணயித்துவிட்டோமோ, அதைப்போலவே நிலத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களின் நலனை உத்தேசித்தும் குறைந்த பட்ச கூலி விகிதம் நிர்ணயிக்கப்படவேண்டும். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டதின்படி கூலி எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமேன்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் இப்பொழுதாவது இதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு இந்த நியாயவார மசோதாவைக் கொண்டு வரும்பொழுதே, ஏன் இதரத் தொழில்களில் கொள்ளை லாபம் அடிக்கிற முதலாளிகள் இல்லையா? தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும், விவசாயத்துறையில் லாபத்தைக் கட்டுப்படுத்துவது போலவே, லாப வரம்பை கட்டுப்படுத்தக் கூடாது

என்று இலர் கேட்கிறார்கள். அது மிகவும் உயர்ந்த கருத்து. 1947-ம் வருஷத்திலேயே, தொழிலாளர்களுடைய மகாநாடு ஒன்றில் பேசும்போது ஸ்ரீ பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இம்மாதிரி தனிப்பட்ட பொதுஸ்தாபனங்களின் லாபத்திற்கும் வரம்பு கட்டப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். அம்மாதிரியாக லாபவரம்பு கட்டப்படத்தான் வேண்டும். அவர்கள் ஏகதேசமாக லாபத்தை அடைந்து கொண்டிருக்கும்படியாக விட்டு வைக்கக்கூடாது.

அடுத்தபடியாக நியாயவார மசோதாவைக் கொண்டு வந்து சாகுபடிச் செலவை எல்லாம் குத்தகைதாரர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் இப்பொழுது சொல்லிவிட்டால் உடனடியாக இந்தச் சாகுபடியாளர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்கவும் தக்க ஏற்பாட்டை செய்ய வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் சாகுபடிக்கு வேண்டிய செலவுகளை எல்லாம் பிறர் கையை எதிர் பார்க்காமல் செய்ய முடியும். உதாரணமாக லால்குடி கிராமத்திலும், புதுக்குடி என்ற இடத்திலும் விவசாயச் சங்கங்களே சாகுபடியாளருக்குக் கடன் வசதி செய்து கொடுக்கப் பல வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். கடன் வசதி செய்து கொடுக்க முன் வந்தால் தான் நிச்சயமாக அவர்களால் நல்ல முறையில் பயிர் செய்ய வசதி ஏற்படும்.

பொதுவாக மிராசுதார்கள் எல்லாம் இந்த நியாயவார மசோதாவுக்குப் பெரியதாக எதிர்ப்பை உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான எதிர்ப்புக்கு அவசியமே இல்லை. சாகுபடியாளர்கள் எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து விதிவிலக்கு அளிப்பதேயே எடுத்து விட்டால் இம்மாதிரியான கூக்குரலுக்கு இடமே இல்லாது போய்விடும்.

எனக்குத்தெரியும். பல ஆண்டுகளாக இந்த நாட்டில் நிலவெளியேற்றம் நடந்து வந்திருக்கிறது. என்றைக்குக் குமாரப்பா கமிட்டி அமைக்கப்பட்டதோ, என்றைக்குச் சுப்பிரமணியம் கமிட்டி அமைக்கப்பட்டதோ, என்றைக்கு விவசாயச் சீர்த்திருத்தம் செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்தத் சர்க்கார் வெளியிட்டோ அன்றையிலிருந்தே இந்த நாட்டில் நிலவெளியேற்றம் நடைபெற்று வருகிறது. ஆகவே நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் எல்லா விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் வகையில் இந்தச் சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டுமென்று மன்றுடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொறுக்குக் கமிட்டியிலுள்ள அங்கத்தினங்களுக்கு ஒரண்பொருவார்த்தை. இன்றைக்கு விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் எவ்வளவு நன்மை கிடைக்குமோ அந்த நன்மை பறிக்கப்படாமலிருக்க உறுதியாகஇருக்கவேண்டும். கனம் மந்திரி அவர்களும் உறுதியாக இருக்க வேண்டும். முடிந்தால் திட்டக் கமிஷன் கூறியுள்ளபடி சாகுபடியாளருக்கு 75 சத வாரம் என்றும், மிராசுதார்களுக்கு 25 சதம் என்றும் நிர்ணயித்து விட்டால் மிகவும் நியாயமாக நாம் நடந்து கொண்டதாக ஆகும். ஆகவே பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினர்கள் மிகவும் உஷாராக இருந்து சாகுபடியாளருக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் இந்த மசோதாவில் செய்யும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

11-10 a.m. **SRI K. PARTHASARATHY :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபைமுன்பு கொண்டுவரப் பட்டிருக்கும் மசோதாவை வரவேற்று, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதையும் ஆதரிக்கிறேன். மேலும் ஸ்ரீ ரமாலிங்கம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பிரேரணையை எதிர்க்கிறேன். ஏனென்று கேட்டால் கனம் ராமலிங்கம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தமானது அசெம்பளி விதிகளுக்கு மிகவும் விரோதமானது. அசெம்பளி விதி 93-ம் ஷரத்தின்படி, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் மந்திரி அல்லாத வேறு மெம்பர் யாரும், இந்த மசோதாவை உடனே விவாதத்

28th January 1956] [Sri K. Parthasarathy]

திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டுவர முடியாது. ஆகவே ஸ்ரீ ராமலிங்கம் அவர்களுடைய பிரேரணையை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

நேற்றையதினம் பேசிய சில அங்கத்தினர்கள் வக்கீல்கள் ஏதோ பெரிய அநியாயம் செய்வது போலச் சொன்னார்கள். கோர்ட்டுகளிலும் கூட வக்கீல்கள் சட்டப்படி வாதாடுகிறார்களே தவிர சட்டத்திற்குப் புறம்பாக, சட்டத்திலுள்ள ஷரத்தை மீறி அநியாயமாக எதையும் செய்யும் படியாக வாதாடுவதில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வக்கீல்களாயிருப்பவர்கள் இந்த சபை அங்கத்தினர்களாகவும் இருக்கின்றனர். அங்கத்தினர்கள் உரிமையை வாதிக்க ஒத்தாசையாகயிருக்கிறார்கள். இதனால் வக்கீல்கள் மீது குற்றம் சாட்டுவதாக சொல்லவில்லை. 11-14 a.m.

Sri C. H. KANARAN : Sir, on a point of clarification. **Are we speaking as the representatives of the lawyers or as Members of the Assembly ?**

Sri K. PARTHASARATHY ; நான் இந்த சமயத்திலே பேசுவது அங்கத்தினன் என்ற முறையிலே தான் பேசுகிறேன். நானும் வக்கீலாக இருந்தபோதிலும், இந்த சபையில் அங்கத்தினனாக இருப்பதனால் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் மசோதாவை தீர ஆலோசித்து கொண்டுவரவேண்டும் என்று சொல்லுகிறேன். நான் வக்கீலாக யாரிடமும் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேச வரவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டத்திலே பல தப்புகள் இருக்கின்றன. இப்பொழுது கொண்டு வந்திருக்கும் மசோதாவை கொண்டுவரவேண்டுமானால் தீர ஆலோசிக்க வேண்டும். இதை ஒரு நல்ல, சிறந்த சட்டமாக கொண்டுவர வேண்டுமானால் இதை ஒரு தனிக்கமிட்டியின் பரிசீலனைக்கு விடுவது நல்லது என்று வலியுறுத்தி இதை ஆதரிக்கிறேன்.

இந்த நிலவார மசோதாவிலே மிகவும் நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இந்த நிலைமையிலே இது அவசியமான சட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இதனால் ஏற்படும் விளைவுகளை மிகைப்படுத்தியே கூறப்பட்டது. மத்திய சர்க்காரின் யோசனைப்படி நிலவுடைமைக்காரர்கள், குத்தகைக்காரர்களின் புள்ளி விவரங்களைத் தயாரித்திருக்கிறது. இப்புள்ளி விவரங்களைக் கொண்டு ஆராய வேண்டிய அம்சங்கள் சில இருக்கிறன. மலையாளமும், தென் கன்னடமும் வேறு எல்லையாக வைத்துக்கொண்டு, தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் 40—60 என்று இருக்கிறது. குத்தகைச் சாகுபடி செய்யக்கூடிய நிலத்தின் விஸ்தீர்ணம் 27,94,000 ஏக்கர் என்றிருக்கிறது. அதாவது மொத்தம் பெற்றுள்ள நிலங்களிலே 97·62 குத்தகைக்காரர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குப்படி பார்த்தால் அந்த ஜில்லாவிலே அதிகமான நிலங்களை குத்தகைக்காரர்களுக்கு விட்டிருக்கவேண்டும். தஞ்சாவூர் ஜில்லாவிலே 100-க்கு 25 விதமும், மற்ற ஜில்லாக்களிலே 9 சதம் வரம்பு குறைவாக இருக்கிறது. தென் ஆற்காடு, வட ஆற்காடு போன்ற வரண்ட பிரதேசத்திலும் கொஞ்சம் நன்மை பயக்கும்படியாக திருத்துவதினால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. குத்தகைக்காரகளுக்கு அட்வான்ஸ் செய்தால் கடன் தொல்லையிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. டெல்டா பிரதேசங்களில் நெற் பயிர் அதிகமாயிருக்கிறது. அவைகள் செழிப்பான பிரதேசமாகையால் போட்டி அதிகமாக இருக்கிறது. மிகவும் வரண்ட பிரதேசமாகிய தென் ஆற்காடு ஜில்லாவிலும், வட ஆற்காடு ஜில்லாவிலும், இன்னும் ஹிமாலய பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் எந்த விதமான போட்டியே இல்லை. ஆகையால் இந்த சீர்திருத்தத்தை இந்த சட்டத்தில் கொண்டு வரலாமென்று இருக்கிறேன். இப்பொழுது கொண்டு வந்திருக்கும் மசோதாவில் சில சிக்கல்கள் இருக்கின்றன. வரண்ட பிரதேசங்களில் போட்டி சரியான அளவுக்கு இல்லாததினால் சில விஷயங்களை பின்னால் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மசோதாவில் குறிப்

பிட்டிருக்கும் " காட்ச் கிராப்ஸ் " என்றதில் சில அம்சங்கள் சரியாக இல்லை. நண்பர் மதனகோபால் சொல்லியபடி மஞ்சளை நடும்போதுதான் வெங்காயத்தை நடுவார்கள். இதுமாதிரி புஞ்செய் பயிரிடும் காலங்களிலெல்லாம் பிரதான பயிர்களையும் பல உப பயிர்களையும் நடுவார்கள். இம்மாதிரியான காலங்களில் எது பிரதான பயிர் என்பதை வரையரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதையெல்லாம் தீர ஆலோசித்து எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய அளவுக்கு சட்டத்தை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொரு விஷயத்தைப்பற்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக சிறிய மிராசுதார்களுக்கு இந்த சட்டத்தினால் அதிக பாதகம் விளையும் என்று சொல்லுகிறார்கள். அதனால் அவர்களுக்கு இச்சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று சொன்னார்கள். இச்சட்டத்தினால் அதிகமான பாதகம் ஏற்படுமென்றால் இதைக் கொண்டு வரலாம் என்பது. உளந்து பயிர் போன்றது " காட்ச் " முக்கிய பயிர்கள் என்றால் என்ன என்பது மசோதாவில் தெளிவாக்கப்பட வேண்டும். அப்படி செய்தால்தான் இச்சிக்கலைத் தவிர்க்க முடியும்.

11-20 a.m. **Sri A. RATNAM** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதற்கு முன் இரண்டு நாட்களுக்குத்தான் விவாதிக்கும்படியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நாட்டில் முக்கியமான பிரச்னையாக இருந்தும், இதற்கு விவாதிப்பதற்கு வேண்டிய போதிய அவகாசம் அளிக்காதது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. இந்த மசோதாவானது மக்களால் வெகு காலமாக எதிர்ப்பார்க்கப்பட்டது. விவசாயிகளுக்கு இதனால் பெரிய உதவி ஏற்படும் என்று சொல்லுகிறார்கள். இதில் முக்கியமாக ஆராய வேண்டியது விவசாயிகளால், நிலத்திற்குச் சொந்தமானவர்கள் யார் என்று பார்க்கவேண்டும். அந்த மக்களுக்கு எவ்வித நிவாரணம் அளிக்கப்படுகிறது என்பதை ஆராய வேண்டும். யார் ஒருவன் நிலத்தை உரமிட்டு உழுது பயிரிடுகிறானோ அவனுக்கு ஒரு விதமான பாத்தியதையே கிடையாது. விவசாயத் தொழிலாளர்களின் கூலியையும் நிர்ணயித்ததாகத் தெரியவில்லை. நிலப்பிரபுக்களும், மிராசுதார்களும் கிராமங்களிலே வாழ்கிறார்களா என்றால், அவர்கள் அங்கே வாழ்வது கிடையாது. சென்னை நகரம் போன்ற நகர் புறங்களில் மிராசுதார்கள் வாழ்வதற்குவசதி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்கள் ஏர் பிடித்து வேலை செய்யும் பண்ணையாட்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. கிராமங்களிலே வாழ்கின்ற சிறு நிலச்சுவான்தார்கள், உத்தியோகஸ்தர்கள், அதிகாரிகள் போன்ற மத்தியஸ்தர்களிடத்திலே அவர்கள் தங்கள் நிலத்தை ஒப்படைத்திருக்கிறார்கள். காரணம் 20, 30, 50 100 ஏக்கர்களை சாதாரண மக்களிடம் ஒப்படைத்தால் தாங்கள் அதிலிருந்து அதிக வருவாய் பெற முடியாது. இரண்டாவது காரணம் மற்ற சதானங்களை வைத்துக்கொண்டு பம்ப் செட்டுகளை வைத்துக்கொண்டு, மாடுகளை வைத்துக் கொண்டு ஏர், விதை முதலியவைகளை வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய முடியாது. எனவே, நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் நகர் புறங்களிலே வாசம் செய்கிறார்கள். அவர்களுடைய நிலங்களெல்லாம் நடுத்தர மனிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவிலே தான் இந்த மசோதாவை கணக்காணிக்க முடிகிறதே தவிர, 100 ஏக்கர் நிலமுள்ள மிராசுதார் பண்ணையாட்களிடத்தில் நிலத்தை ஒப்படைப்பதில்லை. 1,000 ஏகர் வைத்துக்கொண்டிருக்கும் கோவில்களும், மடாதிபதிகளும் இன்னும் மற்றவர்களும் நிலங்களை பண்ணையாட்களிடத்தில் ஒப்படைப்பது கிடையாது. ஆகையினால் மொத்தத்திலே தரகர் போன்ற மத்தியஸ்தர்களே விவசாயிகள் என்று கூறுகிறார்களே தவிர, விவசாயம் செய்கின்ற மக்களை விவசாயிகள் என்று கூறுவது கிடையாது. ஏற்கனவே சுப்ரமணியம் சமர்ப்பித்த நிலச் சீர்த்திருத்த ரிபோர்ட்டில் கூறியபடி தான் நிலச் சொந்தக்காரர்களுக்கு 40 சத விகித வாரமும் சாகுபடி செய்கிறவர்களுக்கு 60 சத விகித வாரமும் என்று இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, விவசாயிக்குள்ள வாரம் மேலும் குறைக்கப்பட்டுதான் இந்தச்

28th January 1956] [Sri A. Ratnam]

சபையிலே கொண்டுவரப்படும். மேலும் விவசாயி என்ற பெயருக்குக்கூட ஆபத்தான கட்டங்களும் நிலவரங்களும் ஏற்படும் என்பதில ஐயமே இல்லை. கனம் அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை உடனடியாக பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பும் காரணத்தினால் கூட இந்த நிலமை ஏற்படும்.

இயற்கையின் காரணமாகவோ அல்லது மழை பெய்யாததாலோ, அல்லது அதிக மழை பெய்து வெள்ளம் அடித்துக்கொண்டு போனதினாலோ பயிர் சாகுபடியாகவில்லை என்றாலும், விவசாயி நிலத்தீர்வை கட்டவேண்டுமென்று இருக்கிறதே அந்த விதி மிகவும் ஆபத்தான நிலைமையில் கொண்டுபோய்விடும். விவசாயிக்கு நிலம் கிடையாது. தன்னுடைய ரத்தத்தையே வியர்வையாகச் சிந்தி அந்த நிலத்தை பயிரிடுகின்ற பொழுது இயற்கைக் கோளாறினாலே அறுவடை செய்ய முடியாமல் போனாலும்கூட, அவனுக்கு நஷ்டம் வந்தாலும்கூட நிலத் தீர்வையை பண்ணையாள் கட்டாயமாக கொடுக்கவேண்டிய விதி இங்கு இருக்கிறது. இதில் நியாயம் இருக்கிறதா என்பதை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல. கோயில்களுக்கும் மடாலயங்களுக்கும் ஆயிரக் கணக்கான ஏகர் நிலங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி ஏதாவது இந்த மசோதா சொல்லுகிறதா என்றால், ஒன்றும் கிடையாது. எனவே இந்த மசோதா மத்தியில் இருக்கும் தரகர்கள் இருக்கிறார்களே அவர்களுக்குத்தான் வழி வகை செய்கிறதே தவிர, குறிப்பாக விவசாயம் செய்கின்ற பண்ணையாட்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, உழுது பயிரிடுகின்றவர்களுக்கு, பிற்பட்டவர்களுக்கு இந்த மசோதா யாதொரு வசதியும் செய்யவில்லை. 2 ஏகர், 5 ஏகர் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் தாங்களே விவசாயம் செய்வார்கள். அவர்களுடைய சக்திக்கு மீறின அளவுக்கு, அதாவது நூற்றுக்கணக்கான ஏகர் நிலம் வைத்திருப்பவர்களின் நிலங்கள், குத்தகைக்காரர்கள் என்று சொல்லப்படுகிற மத்தியஸ்தர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட நிலங்களாக இருக்குமே தவிர, பண்ணையாட்களுக்குக் கொடுக்கின்ற நிலங்களாக இருக்கமுடியாது. 5, 10 ஏகர் நிலம் வைத்திருப்பவர்கள் நேரடியாக சோவாம் படையாச்சி மக்களை வைத்துக்கொண்டு அவர்களுக்குக் கூலியாக கொடுத்து சாகுபடி செய்கிறார்களே தவிர வேறு கிடையாது. எனவே, சாகுபடி செய்கின்ற ஏழை விவசாய பண்ணையாட்களுக்கு நிவாரணமோ கூலி நிர்ணயமோ செய்யப்படவில்லை. இந்த மசோதாவை அவசியமா என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறோம். இந்த மசோதா நடுவிலுள்ள தரகர்களுக்கு கமிஷன் நிர்ணயிப்பதுபோல் இருக்கிறதே தவிர, நிலத்தை உழுது பயிரிட்டு, தண்ணீர் பாய்ச்சி நெல் மணிகளை அறுவடை செய்து நாட்டுக்கு உணவு அளிக்கும் பெருமகன்களின் உழைப்புக்குத் தகுந்த கூலியை நிர்ணயம் செய்யத் தயங்குகிறது.

இந்த மசோதா கொண்டு வரப்படும் நேரத்திலே நாட்டில் நடப்பது என்ன? விவசாயக் கூலி 6 அணாவாக இருந்தால், அவர்களைப் பயமுறுத்தி 4 அணாவாகக் குறைக்கிறார்கள். இல்லையென்றால், அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். மிராசுதார்கள் தங்கள் நிலங்களில் குடிசை கட்டிக்கொண்டிருக்கிற பண்ணையாட்களை, ஒண்டக் குடிசையின்றி விரட்டி அடிக்கிறார்கள். குடிசைகளுக்குத் தீ வைப்போம் என்று அவர்களைப் பயமுறுத்துகிறார்கள்.

நான் சமீபத்தில் திண்டிவனம் ஆவணிப்பூரத்துக்குப் போயிருந்தேன். 2,000 ஏகர் ஒருவருக்கே சொந்தமாக இருக்கிறது. 5,000 ஏகர் தரிசாகக் கிடக்கிறது. ஒரு அங்குல நிலம்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கவில்லை. அவர்கள் விவசாயம் செய்வதற்கும் நிலம் கொடுக்கப்படவில்லை. ஏதோ, ராணுவத்துக்குப் போய்வந்த சிப்பாய்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த 20 ஏகர் நிலத்தைக்கூட மணியக்காரர்களும், மற்றவர்களும் அபகரித்துக்கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அக்கிரமம் செய்கிறார்கள். தரிசாகக் கிடைக்கின்ற நிலங்களைக்கூட, "உழுது பயிரிடுகிறோம், நெல் மணிகளை அறுவடை செய்து தருகிறோம், எங்களுக்கு நிலம் வேண்டும்" என்று விவசாய மக்கள் கேட்டால்

கூட, அதில் ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் கவனம் செலுத்துவது கிடையாது. 10 ஆண்டுகளுக்குமுன் ஹரிஜனங்கள், தாழ்த்தப்பட்டவர்கள் நிலத்துக்கு பணம் கட்டியிருந்தும்கூட அவர்களுக்கு நிலத்தை ஜாரி செய்ய மனமில்லாத அதிகாரிகளும் ஆட்சியாளரும் இந்த நாட்டிலே நிலவி இருப்பார்களேயானால், இந்த மாதிரியான உதவாக்கரை மசோதாவில் நம்பிக்கை கொள்வது மிகவும் கடினமான விஷயம். இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. எனக்கு மேலும் நேரம் கிடையாது.

11-31 a.m. * SRI M. C. MUTHUKUMARASWAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் ரெவின்யு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரித்து இரண்டொரு விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்குமுன்பு, ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு முன்பு, கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் இந்த சபையில் சொன்ன ஒரு விஷயம் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. அதாவது, "சட்டம் புலியைப்போல் வருகிறது, புலியாகவே வருகிறது" என்று அவர்கள் சொன்னார்கள். (சிரிப்பு.) இதைக் கேட்டவுடனே, குறிப்பாக எங்கள் ஜில்லாவில், "புலி வந்தால், அதன் காலை முறிக்கவும் அதன் வாலை ஒடுக்கவும் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று நிலச்சுவான்தார்கள் தங்களைத் தயாரித்துக்கொண்டு ரொம்ப முன் ஜாக்கிரதையுடன் இருக்கிறார்கள்" என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளாமல் என்னால் இருக்கமுடியவில்லை. (சிரிப்பு.) ஏனென்றால் 1952-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம் அங்கு சுக்கு நூறாக ஒடிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தில் ஒரு வேலிக்கு உட்பட்டு நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அங்குள்ள மிராசுதார்கள் அத்தனை பேரும் அந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு எந்த எந்த முறையில் நிலத்தை சின்ன சின்னமாகப் பிரித்து, விவசாயி உள்ளே நுழையிடமுடியாமல் தடைசெய்ய முடியுமோ, அந்த எல்லா வழிகளையும் கையாண்டிருக்கிறார்கள். இப்போது வரப்போகும் சட்டத்தில் கூட கொஞ்சம் கண்ணும் கருத்துமாய் இருந்து கவனிக்காமல் போனால், ஏதோ மிராசுதாருக்கு 40 சத விகிதம் பங்கு விவசாயிக்கு 60 சத விகிதம் பங்கு என்று சொல்வதெல்லாம் ஒன்றும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடுமென்று நான் கருதுகிறேன். ஆகையால் சட்டமியற்றுவது சுலபம் என்றாலும்கூட அது நடைமுறையில் சரியாக அமல் நடக்கின்றதா என்று உற்றுநோக்கவேண்டும். புதிய சட்டம் அங்கே போவதற்கு முன்பு, "பழைய சட்டம் எந்த நிலையில் இருக்கிறது. அது பலன் அளித்திருக்கிறதா" என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, அந்தச் சட்டம் நடைமுறையில் நன்றாகப் பயன் அளிக்கவில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆகவே வரப்போகும் புதிய சட்டம் அமல் நடத்தப்படும்போது, அந்தச் சட்டம் வாஸ்தவத்தில் பயனளிக்கின்றதா என்று பார்ப்பதற்காக, பிர்க்காவுக்கு ஒருவர் வீதம் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பிர்க்காவாரியாக இல்லாவிட்டாலும் தாலூகா வாரியாகவாவது இன்ஸ்பெக்டர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த சமரஸ அதிகாரிகள் எந்த முறையில் தான் நியாயம் வழங்குகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இவர்களில் பெரும்பாலோர் "நெல் மரத்தில் காய்க்கின்றது" என்று சொல்லுகிறவர்கள் போலத்தான் இருக்கிறார்கள்.

பழைய சட்டம் அமலுக்குவந்த பிறகு, எங்கள் ஜில்லாவில் உள்ள மிராசுதார்கள் பழைய சம்பிரதாயங்களின்படியும், பழைய பழக்கவழக்கங்களின்படியும் விவசாயிகளுக்குக் கொடுத்துவந்த சில சலுகைகளைக் கொடுப்பதில்லை. ஏனென்றால், சட்டத்தில் அவைகளுக்கு இடமில்லை என்று சொல்லுகிறார்கள்; உதாரணமாக தீபாவளிபோன்ற விசேஷ

28th January 1956] [Sri M. C. Muthukumaraswami]

காலங்களில் ஏழை விவசாயிகளுக்கு வேஷ்டி, எண்ணை முதலியவை கொடுக்கும் வழக்கம் உண்டு. இதை விவசாயிகள் கேட்கும்போது சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா ? இல்லவே இலலே. பண்ணை வேலை செய்யும் ஆணுக்கும் பெண்ணுக்கும்தான் சட்டத்தில் இடம் இருக்கிறதே தவிர மாடு மேய்க்கும் சிறுவனுக்கு இடம் இல்லை. இது நடைமுறையில் இருந்துகொண்டிருக் கிறது. அது மாத்திரமில்லை.

DEPUTY SPEAKER : The time-limit for each speaker is reduced to five minutes.

* **SRI A. VELOO :** கனம் உதவித் தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நியாய வார மசோதாவை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த மசோதாவில் பல முக்கியமான அம்சங்கள் இருந்தா லும் இன்னும் சில முக்கியமான அம்சங்கள் கவனிக்கப்படாமல் விடப் பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விவசாயப் பண்ணையாட்களைப்பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை. பொறுக்குக் கமிட்டியி னர் இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அவர்களுடைய கூலியையும் நல்ல முறையில் உயர்த்துவதற்கு நியாயமான ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 11-35 a.m.

இன்னொரு விஷயம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்களிடத்தில், தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கும் அத்தனை சட்டசபை மெம்பர்களும் கையெழுத்திட்ட ஒரு மெமோராண்டைத்தை போன அஸெம்பிளிக் கூட்டத்தின் போது கொடுத்தோம். அதாவது எங்கள் ஜில்லாவில் குடியிருப்பு மனைகளிலுள்ள ஏழை மக்களை அநியாய மாக வெளியேற்றியும், அவர்கள் மீது கேஸ்கள் போட்டும், கேஸுக்காகச் செலவு செய்யும் பணத்தைக் கூட அவர்களிடமிருந்து வசூலித்தும் வருகிறார்கள். இந்த நிலைமையை நீக்கவேண்டுமென்று மெமோராண் டம் கொடுத்தோம். அது சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் தக்க பாது காப்பளிப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதை இந்த சமயத்தில் அமைச்சர் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மனைகளிலிருந்து ஏழை மக்கள் வெளியேற்றப்படுவதைத் தடுக்க நல்ல முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கோவில் நிலங்களைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தஞ்சாவூர் ஜில்லாவில் மூன்று பெரிய மடங்களும் பல கோவில்களும் இருக்கின்றன. இவைகளைச் சேர்ந்த நிலங்கள் தஞ்சை ஜில்லா நிலத்தில் ஐம்பது, சத வீதம் (50%) இருக்கின்றன. அந்த நிலங்களில் பயிர் செய்யும் ஏழை விவசாயிகள் நடுவிலிருக்கும் குத்தகைக்காரர்களால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மசோதா வில் நடுவிலிருக்கும் குத்தகைக்காரர்களை நீக்கி குடிக் குத்தகைக்கு விடு வதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அதிகபட்சமாக ஒருவர் பண்ணைச் சாகுபடிக்கு எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி இந்தச் சட்டத்தில் குறிப்பிடவில்லை சட்டம் வருவதற்கு முன்னதாகவே, நிலச்சுவான்தார்கள் நிலத்தைப் பிரித்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏற் பாட்டின் மூலம் ஒரு வேலிக்கு மேற்படாமல் நிலம் வைத்துக்கொண்டிருப் பவர்களைக் கட்டுப்படுத்தாது என்று தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதனால் இப்போது மிராசுதார்கள் எல்லோரும் முன் கூட்டியே அவர்கள் நிலங்களைப் பிரித்துக்கொண்டு வரப்போகும் சட்டம் தங்களைக் கட்டுப்படுத்த முடியாதபடி ஏற்பாடுகள் செய்துகொண் டிருக்கிறார்கள். ஒரு வேலிக்கு அதிகமாக வைத்துக்கொண்டிருக்கும் ஒரு வரிடம் பண்ணை விவசாயம் செய்பவர் எவ்வளவு வேலை செய்கிறாரோ அவ்வளவு வேலையும் ஒரு வேலிக்குக் குறைவாய் வைத்துக்கொண்டிருப்

பவரிடத்தில் வேலை செய்பவரும் செய்கிறார். ஆகவே அவர்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது என்று சொல்வது மிகவும் அநியாயமானது. மேலும், இந்த ஒரு வேலி நிலம் வைத்திருக்கிறவர்கள் கூட விவசாயம் தவிர வேறு தொழில் செய்துகொண்டு விவசாயத்தின் மூலமும் தங்கள் வரும்படியை அதிகரித்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆகவே சட்டத்தில் இவர்களுக்கு விலக்கு அளிப்பதால் பலனில்லாமல் போகிறது. ஆகையால் இந்த மசோதாவில், தஞ்சாவூர் ஜில்லாவிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள ஒரு வேலிக்கு உட்பட்ட நிலம் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு இடம் கொடுத்து, புதிதாக அந்த அம்சத்தைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தில் இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. சட்டத்தை விளக்கும் வார்த்தைகள் ஆங்கிலத்திலோ, தமிழிலோ இருந்தாலும் இரண்டு பக்கமும் விவாதம் செய்யக்கூடியதாக இருக்கிறது. வக்கீல்கள் "அர்த்தம் இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று பேசி ஏழை விவசாயிகளுக்கு பாதகம் விளைவிக்கக்கூடியதாக இரண்டு அர்த்தம் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் இல்லாமல் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று விளக்கமாக வார்த்தைகளில் கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

11-40 a.m. * SRI V. C. PALANISWAMI GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இன்றைக்குத்தான் இந்தச் சபைக்கு வரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. நேற்று தைப் பூசம் ஆதலாலே என்னால் வர முடியவில்லை. வந்திருந்து இந்தச் சபையில் இந்த மசோதாவின் மீது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை கேட்கமுடியவில்லை. அதற்காக வருந்துகிறேன்.

இந்த நியாயவார மசோதாவின்படி சாகுபடியாளருக்கு 60 சத வீத வாரமும், நிலச்சுவாந்தாருக்கு 40 சத வீத வாரமும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் பேசிய போது இப்பொழுது தாங்கள் மிராசுதார்களுக்கு அதிகமாகக் கொடுத்திருப்பது போலவும், திட்டக் கமிஷன் இன்னும் குறைச்சலாகவே கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதாகவும் குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். திட்டக் கமிஷன் கண்ணோக்கம் அகில இந்தியாவையும் பொறுத்தி இருக்கிறது. ஆனால் நமது ராஜ்ய சர்க்கார் இந்த ராஜ்யத்தில் நிலவி வரும் பழக்க வழக்கங்களை கண்ணோக்கத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. அதனால் தான் ராஜ்ய சர்க்கார்கள் அவர்களுடைய ராஜ்யத்தில் இருந்து வரும் விவசாய அமைப்புக்கு ஏற்ப சட்டங்களைச் செய்து கொள்ளலாம் என்பதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே திட்டக் கமிஷன் கூறியதையே அப்படியே இந்த ராஜ்யத்திலும் இமிடேஷன் செய்ய வேண்டாமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த ராஜ்யத்திலே ஜில்லாவாரியாகப் பார்த்தால் சாகுபடி வார விகிதம் அந்தந்த இடங்களுக்குத் தக்கவாறு அதிகமாகவோ, குறைவாகவோ இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக தஞ்சையை எடுத்துக் கொள்ளுங்கள். திருச்சியை எடுத்துக்கொள்ளுங்கள். அதே போல, சிதம்பரம், கோயம்பத்தூர் போன்ற பகுதிகளை எடுத்துக்கொள்ளுங்கள். விவசாய முறைகளே இடத்திற்கு இடம் மாறுபட்டு இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே பெருவாரியாக நஞ்சைதான் இருக்கின்றன. ஆனால் கோயம்பத்தூரிலே தோட்டக்கால் விவசாயம், புஞ்சைதான் அதிகமாக இருக்கிறது. அந்தப் பிரதேசங்களிலே சர்க்காருடைய உதவியினால் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே நிலச் சொந்தக்காரர் யாதொருவிதமான இன்வெஸ்டும் செய்யவில்லை என்று சொல்லி விடமுடியாது. குறிப்பாக கோயம்பத்தூரில் ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்றால் பத்தாயிரம் ரூபாய் முதல் இருபதாயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. இம்மாதிரி கிணறுகள் வெட்டுவதற்கு பிரைவேட் செக்டார்

28th January 1956] [Sri V. C. Palaniswami Gounder]

முன்னுக்கு வரவேண்டுமென்று சொன்னால், சாகுபடியில் 40 சத வீதம் தான் நிலச்சொந்தக்காரருக்கு என்று வரையறுப்போமானால் எந்த நிலச் சொந்தக்காரரும் இவ்வளவு அதிகமான ரூபாயைப் போட்டு இணறு வெட்டுவதற்கு முன்னுக்கு வரமாட்டார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இவ்விஷயத்தைச் சர்க்கார் கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்க வேண்டுமென எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இந்த நாற்பது, அறுபது என்ற மனப்பான்மையைச் சற்று மாற்றிக்கொள்ள வேண்டும். நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தில் போடும் பணத்திற்குத் தக்க வருமானம் அதிலிருந்து கிடைக்கவேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதிலே சர்க்காருடைய கண்ணோட்டம், "பிரதான போகப் பயிர்" என்ற மனப்பான்மையில் சென்றிருக்கிறது. புஞ்சைப் பயிர், தோட்டப்பயிர் போன்றவைகளுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கப்படவில்லை. நஞ்சைப் பயிரிலும் பிரதான போகப் பயிரின் விளைவில் நாற்பது சதம் மிராசுதார்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

குறிப்பாக தோட்டக்கால் பயிரை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு இரண்டு மூன்று போகம் சாகுபடியாகிறது. கோயம்பத்தூரில் இம்மாதிரி நடக்கிறது. முதலில் சோளம் போடுவார்கள். இரண்டாம் போகமாக, இராகி, மூன்றும் போகமாக புகையிலை ஆக மூன்று போகங்கள் சாகுபடி செய்கிறார்கள். ஒரு போக நஞ்சைகளுள்ள சலுகையே, மூன்று போகம் விளைவிக்கும் தோட்டக்கால் பயிருக்கும் கூட்டி கொடுக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

எவ்வளவோ கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு சர்க்கார் பல நீர்ப்பாசனத் திட்டங்களை தற்போது ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது பிரின்னியில் கிராப்பில் என்ன பாகம் மிராசுதார்களுக்குப் போய்ச் சேருகிறதோ, அதே விகிதப்படி எவ்வளவு போகம் பயிர் செய்தாலும் அந்தப் பயிர்களெல்லாவற்றிலும் பங்கு இருக்கவேண்டும். ஆகவே செக்ஷன் மூன்று, நான்கிலேயுள்ள ப்ரோவிசோக்களை எல்லாம் எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இத ஊடு கிராப்பிலே, கரிசை நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். மதுரை, கோயமுத்தூர், உடுமலைப்பேட்டை, திண்டுக்கல் போன்றயிடங்களில் பெரிதும் கரிசல் நிலம் தான். அதிலே இரு கலப்பு, பயிர் செய்ய வேண்டியிருக்கிறது. அதிக மழை பெய்தால் தினை, கொத்தமல்லி போன்றவைகள் கெட்டு விடுகின்றன. மழையில்லாவிட்டாலும் இந்தப் பயிர் நாசமாகிவிடும். ஆனால் அப்போது பருத்தி நன்றாக விளைகிறது. ஆகவே ஊடு கிராப் என்பதையே இந்தச் சட்டத்திலிருந்து எடுத்துவிடுவது நலம். அதுதான் நியாயமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

தவிர ஜில்லாவிற்கு ஜில்லா சாகுபடி நிலைமை மாறுகிறது. சர்க்கார் இதையும் கணக்கில் வைத்துக்கொண்டே சட்டம் செய்ய வேண்டும்.

நேற்று ஸ்ரீ பாயஸ் அவர்கள் பேசியபோது, பொறுக்குக் கமிட்டி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சென்று அங்குள்ள நிலைமை நேரிலே விசாரித்துத் தெரிந்து கொண்டு, ஆங்காங்கே உள்ள நிலைமைக்கேற்ப இந்தச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னதாகப் பேப்பரில் பார்த்தேன். அது மிகவும் நல்ல யோசனை. பொறுக்குக் கமிட்டியார் இப்படியே பலயிடங்களுக்கும் சென்று விசாரிக்க வேண்டும். முன்னே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை தஞ்சாவூருக்குக் கொண்டு வந்த போதும் நன்கு விசாரித்தே கொணர்ந்தார்கள். அதிலே வாரம் 60 சத வீதம், 40 சத வீதம் என்று பிரிக்கப்பட்டது. அதற்குறிய காரணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு வேலி நிலத்திற்குக் குறைவானவர்களுக்கு எல்லாம் விதிவிலக்கும் அளிக்கப்பட்டு. பொதுவாகப் பார்த்தால் சாகுபடி நிலைமை ஜில்லாவிற்குச் ஜில்லா மாறுபட்டிருக்கிறது. அவற்றுக்கு எல்லாம் தக்க வகையில் இந்தச் சட்டம் திருத்தப்படவேண்டும்.

[Sri V. C. Palaniswami Gounder] [28th January 1956

തോട്ടക്കാൽ വിഷയമാകച് ചർക്കാർ ചെയ്തിരുപ്പതു നിയായമേയില്ലേ. ഇന്തച് ചട്ടമ് വറ്പുറുത്തപ്പടുമ് പട്ചത്തിൽ മേറ്കൊണ്ടു കിണ്ണുകളെ വെട്ട എന്ത നിലച്ചൊന്തക്കാരുമ് മുൻവരമാട്ടാർകൾ എൻറു ചൊല്ലിക്കൊണ്ടു എൻ പേച്ചെ മുടിത്തുക് കൊൾഞുകിറേൻ.

11-48 മ.ഉ. **Sri C. H. KANARAN** : മിസ്റ്റർ ഡിപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഞാൻ ഈ ബില്ലിനെ പൊതുവേ സ്വാഗതം ചെയ്യുന്നു. അതേ സമയം ചില സംഗതികൾ പ്രത്യേകം ചൂണ്ടിക്കാണിക്കാനു ഞാനാഗ്രഹിക്കുന്നു. മര്യാദപാട്ടത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം പ്ലാനിംഗ് കമ്മീഷൻറെ ശുപാർശയിൽനിന്നു ഈ ബില്ല് വളരെ താഴോട്ടു പോയിട്ടുണ്ടെന്നാണ് എൻറെ അഭിപ്രായം. ജന്മിയുടെ വീതം 25 ശതമാനത്തിലധികമാകാൻ പാടില്ലെന്ന് പ്ലാനിംഗ് കമ്മീഷൻ ശുപാർശചെയ്തിരുന്നിട്ടും അതു് 40 ശതമാനംവരെ വർദ്ധിപ്പിച്ചിരിക്കയാണ് ഈ ബില്ലിൽ. 25 ശതമാനത്തിലധികമാകാൻ പാടില്ലെന്ന് പ്ലാനിംഗ് കമ്മീഷൻ നിശ്ചയിക്കാനുള്ള കാരണമെന്താണ് ? അദ്ധ്വാനിക്കുന്ന കൃഷിക്കാരനുവേണം ആദായത്തിൻറെ മുഖ്യമായ ഭാഗം ആദ്യമായി നീക്കിവെക്കുവാൻ, കൃഷിക്കാരനുവേണം ഒന്നാമത്തെ പരിഗണന നൽകുവാൻ, അതു കഴിഞ്ഞിട്ടു മതി ജന്മിയുടെ അവകാശം പരിഗണിക്കുവാൻ എന്ന ആശയംവച്ചുകൊണ്ടാണ് പ്ലാനിംഗ് കമ്മീഷൻ ഇങ്ങനെ ശുപാർശചെയ്തിട്ടുള്ളതു്. പക്ഷെ ആ ശുപാർശയെപ്പോലും മാററിക്കൊണ്ട് ഗവമ്മേണ്ട് വളരെ താഴോട്ടുപോയിരിക്കയാണ് ഈ ബില്ലിൽ. ഇതാണു വീതത്തെ സംബന്ധിച്ച് എനിക്കുള്ള ആക്ഷേപം.

ഇനി, എല്ലാ മിക്കിലും ഒരേ നിരക്കിൽ വീതം നിശ്ചയിക്കുന്നതു് ശരിയല്ലെന്നാണു എനിക്ക് ചൂണ്ടിക്കാണിക്കുവാനുള്ളതു്. കൃഷിച്ചെലവു കൂടുതലും ആദായം കുറച്ചും ആയിട്ടുള്ള പ്രദേശങ്ങളെ സംബന്ധിച്ചിടത്തോളം ഈ നിരക്ക് സ്വീകാര്യമല്ല. 60 ശതമാനമോ 75 ശതമാനമോ കിട്ടിയാലും കൃഷിക്കാരന് നഷ്ടംവരുന്ന സ്ഥലങ്ങളുണ്ട്. അങ്ങനെയുള്ള സ്ഥലങ്ങൾക്കു വേണ്ടി പ്രത്യേകം വ്യവസ്ഥകൾ ഉൾപ്പെടുത്തേണ്ടതാണ്. പ്ലാനിംഗ് കമ്മീഷൻറെ ശുപാർശയിലും കഴിഞ്ഞ 20 ശതമാനമോ 10 ശതമാനമോ ആയി നിശ്ചയിച്ചാലേ ന്യായമാകൂ എന്നുള്ള സ്ഥലങ്ങളിൽ അതിനു ഒരു വ്യവസ്ഥയുണ്ടാക്കുന്നതു് വെറും ന്യായം മാത്രമാണ്.

മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിച്ചു കിട്ടുന്നതിനു് കൃഷിക്കാരൻ കോടതി കേറിയിറങ്ങണമെന്ന് പറഞ്ഞാൽ അതിൽ എത്രമാത്രം ബുദ്ധിമുട്ടുണ്ടെന്ന് ആലോചിക്കേണ്ടതാണ്. ചുരുങ്ങിയ ചെലവിൽ വലിയ ബുദ്ധിമുട്ടും കാലതാമസവുമൊന്നും കൂടാതെ കൃഷിക്കാരനു മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിച്ചു കിട്ടുവാനുള്ള ഏപ്പാടുകളാണ് വേണ്ടതു്. സാധുക്കളായ ചെറിയ കൃഷിക്കാർക്ക് പാട്ടക്കോടതികളിൽ പോകാനും വക്കീലന്മാരെയെച്ചു കേസ്സു നടത്താനുമൊന്നും എളുപ്പമല്ല, തീരെ സാദ്ധ്യമല്ലെന്നുതന്നെ പറയാം. മലബാറിലെ പാട്ടക്കോടതികളുടെ അനുഭവം വച്ചുകൊണ്ടാണ് ഞാനിതു പറയുന്നതു്. ജന്മിമാർക്കാണെങ്കിൽ വലിയ വക്കീലന്മാരെയെല്ലാംവച്ചു വാദിക്കാനും ഉദ്യോഗസ്ഥന്മാരെ സ്വാധീനത്തിലാക്കി കേസ്സു നീട്ടിക്കൊണ്ടുപോകാനും കൃത്രിമങ്ങൾ ചെയ്യാനുമെല്ലാം എളുപ്പമാണ്. കൃഷിക്കാരനു ഗുണം കിട്ടാൻ നിയമമുണ്ടാക്കുമ്പോൾ യഥാർത്ഥത്തിൽ ആ ഗുണം അവനു സിദ്ധിക്കത്തക്ക വിധത്തിലുള്ള ഏപ്പാടുകൾകൂടിയില്ലെങ്കിൽ നിയമം കടലാസിൽ ശേഷിക്കുകയേയുള്ളു. ഗ്രാമങ്ങളിൽ സഞ്ചരിച്ചു കൃഷിക്കാര് യാതൊരു ചെലവിനും ബുദ്ധിമുട്ടിനും ഇടയാക്കാതെ തീർപ്പു നൽകുന്ന പാട്ടക്കോടതികളേപ്പെട്ടത്തിയാലേ ഈ ബില്ലുകൊണ്ട് ഉദ്ദേശിക്കുന്ന ഗുണം കൃഷിക്കാരന്നു കിട്ടൂ. താലൂക്കിൻറെ തലസ്ഥാനത്തിരിക്കുന്ന താസിൽദാർന്മാരെ സമീപിച്ചു് ഹരജികൊടുത്തു് നീതി സമ്പാദിക്കാൻ കഴിവുള്ളവരല്ല ഭൂരിപക്ഷം കൃഷിക്കാരും. അതുകൊണ്ട് ഗ്രാമങ്ങളിൽ ചുററി സഞ്ചരിച്ചു് കൃഷിക്കാരുടെ അടുത്തുപോയി കേസ്സുകൾ കേട്ടു തീർപ്പു നൽകുന്ന പാട്ടക്കോടതികളെ നിശ്ചയിക്കണമെന്ന് ഞാൻ ആവശ്യപ്പെടുന്നു. പാവപ്പെട്ട കൃഷിക്കാരൻ ഒരു പൈപോലും ചെലവാകാതെ നീതികിട്ടാനുള്ള ഏപ്പാടാണ് വേണ്ടതു്. പതിനെട്ടു പാട്ടക്കോടതികൾ മലബാറിലുണ്ട്. ഒരു കൊല്ലമായിട്ട് ഇവ പ്രവർത്തിച്ചുവരികയാണ്. ഈ ഫിബ്രുവരിയിൽ പല കോടതികളും അവസാനിക്കാൻ പോവുകയുമാണ്. ഇത്രയും കോടതികൾ ഇത്രയും കാലം പ്രവർത്തിച്ചിട്ട് വളരെ തുച്ഛമായ ഒരു ശതമാനം കൃഷിക്കാർക്ക് മാത്രമേ ഈ കോടതികളിൽ പോയി മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിച്ചു കിട്ടുവാൻ സാധിച്ചിട്ടുള്ളു. വലിയ വലിയ ഉദ്യോഗസ്ഥന്മാരെ പാട്ടക്കോടതികളായി നിശ്ചയിച്ചു്

28th January 1956] [Sri C. H. Kanaran]

നാട്ടിൻെറ ഏതെങ്കിലും ഒരു ഭാഗത്തു് കോടതി നടത്തിയാൽ പത്തും പതിനഞ്ചും മൈലകലെ നിന്ന് സാധ്യക്കുടയ ചെറിയ കൃഷിക്കാർക്ക് കോടതിയിൽചെന്ന് നീതി സമ്പാദിക്കാൻ സാദ്ധ്യമല്ല.

പിന്നൊന്നു പറയാനുള്ളതു് തെളിവിൻേറയും രേഖയുടേയും കാര്യമാണ്. ലാൻഡ് സെൻസസ്സിൽ ഉണ്ടായിട്ടുള്ള തകരാറുകൾക്ക് കൈയും കണക്കുമില്ല. ജന്മിമാർ ഉദ്യോഗസ്ഥന്മാരെ സ്വാധീനപ്പെടുത്തി എന്തെല്ലാം കള്ളക്കണക്കുകളാണ് എഴുതിപ്പിടിപ്പിച്ചിട്ടുള്ളതെന്നു് അന്വേഷിച്ചാലറിയാം. ഹൈദരാബാദിൽ നടന്ന അഴിമതികൾ വെളിച്ചത്തു വന്നിട്ടുള്ളതു് നമുക്കെല്ലാമറിയാം. അതുപോലെ തന്നെയാണ് എല്ലാ ദിക്കുകളിലും ഏറെക്കുറെ നടന്നിട്ടുള്ളതു്. ഇന്നാട്ടിലും ധാരാളം കള്ളക്കണക്കുകളും രേഖകളും ലാൻഡ് സെൻസസിൻെറ പുതല വഴിച്ച അംശം ഉദ്യോഗസ്ഥന്മാരേയും മററധികാരികളേയും സ്വാധീനിച്ച് ജന്മിമാർ എഴുതിവസ്സിച്ചിട്ടുണ്ട്. കൂടാതെ കൃഷിക്കാരെ ഭീഷണപ്പെടുത്തിയും കള്ളപ്രമാണങ്ങൾ എഴുതിവാങ്ങി സൂക്ഷിച്ചിട്ടുണ്ട്. അതുകൊണ്ട് പ്രമാണങ്ങളേയും കണക്കുകളേയും മാത്രം ആശ്രയിക്കാതെ നാട്ടിൽ ചെന്ന വരമാർത്ഥമെന്തെന്ന് അന്വേഷിച്ച് നീതിമാന്മാരുടെയാലേ കൃഷിക്കാർക്ക് ന്യായമായ തീർപ്പുകൾ നൽകാൻ പാടുകോടതികൾക്ക് സാധിക്കൂ. അല്ലെങ്കിൽ എത്രയോ കൃഷിക്കാർക്ക് ഭൂമിയില്ലാതാകാൻ പോവുകയാണ്. പാട്ടക്കുടിശ്ശികയെ സംബന്ധിച്ചും കൃഷിക്കാരൻെറ കടത്തെ സംബന്ധിച്ചും ബില്ലിൽ വ്യവസ്ഥകളൊന്നും കാണുന്നില്ല. അതുകൊണ്ട് കൃഷിക്കാരൻെറ ഗുണത്തിനെന്നും പറഞ്ഞു നിയമവുണ്ടാക്കിയിട്ട് എത്രയോ കൃഷിക്കാരുടെ ഭൂമി നഷ്ടപ്പെടുന്ന ഒരു പരിതസ്ഥിതിയാണ് ഈ രാജ്യത്തു ഉണ്ടാകാൻ പോകുന്നതു്. അതുകൊണ്ട് രണ്ടു കാര്യങ്ങൾ അത്യാവശ്യമായി ചെയ്യേണ്ടിയിരിക്കുന്നു. ഒന്ന്, കൃഷിക്കാരൻെറ ഭൂമി ഒരു കാരണവശാലും പിടിച്ചെടുക്കാൻ ജന്മിക്കു അധികാരമില്ലെന്ന് പ്രഖ്യാപിക്കുക; രണ്ടു്, ജന്മിമാർക്കു അതിനു കൃഷിക്കാരെ മോഹിക്കുന്ന ഉദ്യോഗസ്ഥന്മാരെ താങ്ങിയെടുക്കുകയും കഠിനമായി ശിക്ഷിക്കുകയും ചെയ്യുക. ഈ രണ്ടു കാര്യങ്ങളുംകൂടി ഇതോടൊപ്പം ചെയ്തില്ലെങ്കിൽ കൃഷിക്കാരുടെ ഭൂമിയെപ്പോലും ജന്മിമാരുടെ കൈവശത്തിലാകാൻ അധികം താമസമില്ല. കൃഷിക്കാരുടെ കടങ്ങളും പാട്ടക്കുടിശ്ശികളും റദ്ദു ചെയ്യണമെന്ന് ആവശ്യപ്പെട്ടിട്ടു ശവമേണ്ടു് ഇനിയും ഈതു് ചെയ്തിട്ടില്ല. അതിനുള്ള ഒരു നിയമംകൂടെ ഉടനെ കൊണ്ടുവരണമെന്ന ഞാൻ ആവശ്യപ്പെടുന്നു. എങ്കിലേ ഈ നിയമം കൊണ്ടുദ്ദേശിക്കുന്ന ഗുണം കൃഷിക്കാരനു കിട്ടൂ.

ചുരുക്കത്തിൽ ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു് ഇത്രയുമാണ്. കൃഷിക്കാരന് സ്വൈകര്യമായ വിധത്തിൽ ഗ്രാമങ്ങളിൽ സഞ്ചരിച്ചു നീതി നൽകുന്ന പാടുകോടതികളെ ഏർപ്പെടുത്തുക. ജന്മിമാർ യാതൊരു കാരണവശാലും കൃഷിക്കാരൻെറ ഭൂമി തട്ടിപ്പെടുക്കാൻ പാടില്ലെന്ന വ്യവസ്ഥചെയ്യുക. കുത്തകപ്പാട്ടമോ കരാറുപാട്ടമോ എന്തുതന്നെയായിരുന്നാലും 25 ശതമാനത്തിലും കുറയ്ക്കേണ്ടതു് ന്യായമാണെന്നുള്ള കേസുകളിൽ യാതൊരു തടയുംകൂടാതെ മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിക്കാനുള്ള വ്യവസ്ഥചെയ്യുക. പാട്ടബാക്കി കുത്തകബാക്കി ഉടമ്പടിയ കഴിഞ്ഞകാല ബാദ്ധ്യതകളെല്ലാം റദ്ദുചെയ്തു ഏപ്രിൽ ഒന്നാം തിയ്യതി മുതൽ ഒരു പുതിയ കാലഘട്ടം ആരംഭിക്കയാണെന്നു കണക്കാക്കുക. ഇതുകൂടി ചെയ്താലേ കൃഷിക്കാർക്ക് ഈ നിയമംകൊണ്ടു് രക്ഷകിട്ടൂ. അതിനുള്ള വ്യവസ്ഥകൾകൂടി ഉൾപ്പെടുത്തണമെന്ന് അഭ്യർത്ഥിച്ചുകൊണ്ട് എൻെറ പ്രസംഗം അവസാനിപ്പിക്കുകയാണു്.

SRI G. VAGHEESAM PILLAI: കണം ഉതവി സപാനായകർ അവർകളേ, ഇന്ത നിയായവാര മശോതാവെ ആതരിത്തു സില വാർത്തൈകൾ സൊല്ല വിരുമ്പുകിറേൻ. ഇപ്പോതു ഇതു എല്ലോരാലും ഒപ്പുക്കൊള്ളപ്പട്ടു, വരവേറ്കത്തക്കതാക തെരിക്കിറതു. നാൻ മുൻപു പേശിയപോതു ഉള്ള പിരദേശത്തിൽ എവ്വാറു വാരം നിർണയിപ്പതു എൻപതൈപ്പറ്റി പേശിനേൻ. തഞ്ചാവൂർ പണ്ണൈയാൽ പാതുകാപ്പുച് ചട്ടം വരുവതുക്കു മുൻപു 40 ശത വിതം കുത്തകൈക്കാരർകളുക്കുക് കൊടുക്ക വേണ്ടുമെന്നു പോടപ്പട്ടതു. അതുമ്പോതാതു എന്നു ഇപ്പോതു കുത്തകൈക്കാരർകളുക്കു 60 ശതം കൊടുക്ക വേണ്ടുമെന്നു ചട്ടം കൊണ്ടു വന്തിരുക്കിറാർകൾ. ഇതിൽ നാൻ ഒരു തിരുത്തം മാത്തിരം ചെയ്യവേണ്ടും എന്നു വിരുമ്പുകിറേൻ. സ്റ്റേറ്റുമെണ്ട് ആപ് ആപ്ജക്ട് അണ്ടു റീസണിലേ. 11-55 a.m.

[Sri G. Vagheesam Pillai] [28th January 1956

In the statement of objects and reasons it is stated as follows :—

The Planning Commission has also recommended that the rights of tenants require to be defined and that rent should be fixed taking into account the expenses of cultivation and other risks of the cultivators.

இருக்கக்கூடி இடங்களில் பயிரிடுவோருக்கு கஷ்டம் அவ்வளவாக இல்லை. பூச்சி முதலியவைகள் வந்தால் பயிர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்பதற்காக குத்தகைக்காரர்களுக்கு 55 சத விகிதமும் நிலச் சொந்தக்காரர்களுக்கு 45 சத விகிதமுமாகக் கொடுக்க வேண்டும் என்று சுப்ரமணியம் கமிட்டி சொன்னது. சிறு நிலச்சுவாந்தார்கள் உரம் முதலியவை வாங்குவதற்காக 5 சதமாவது குறைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவதாக பிரைவேட் செக்டார் பற்றி குறிப்பிட்டு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

If any question arises whether any land is double crop wet, single crop wet, or dry, or garden land, the question shall be decided with reference to the classification adopted in respect of the land in the registers of the Government.

சிதம்பரம் டிவிஷனிலே சில கணக்குகள் தான் உண்டு. ஆனால் எங்கள் தாலுக்காவில் 7,000 ஏக்கரா நிலங்கள் தான் உண்டு. ஆனால் இப்போது இரண்டு போகம் விளையக்கூடிய நிலங்கள் 3,000 ஏக்கருக்கு இருக்கிறது. விருதாசலம் டிவிஷனிலும் இந்த வருஷம் இரண்டு போகம் செய்வதற்கு ஆரம்பிக்கலாம் என்றிருந்தார்கள். இரண்டு போகம் பயிரிடுதல் டெனண்ட் தான் செய்யவேண்டும். இரண்டாம் போகம் பயிரிடுவதற்குக் கடன் கொடுப்பதெல்லாம் நிலச்சுவாந்தார்கள்தான்.

இப்பொழுது நீர்ப்பாசன வசதியுள்ள நிலத்திற்குச் செலவுகள் இல்லையென்று சொல்லுகிறார்கள். இந்தச் சமயத்தில் விவசாயிகளுக்கு தக்காவிக் கடன் கொடுத்து உதவினால்தான் உணவு உற்பத்தி பெருகும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். கால்வாய், குளம், ஏரி முதலியவற்றினால் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலச்சொந்தக்காரர்களுக்குப் பாத்தியதை தந்தால் உற்பத்தி பெருகக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த விஷயத்தில் பாகத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம்.

வைக்கோலைப்பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். வைக்கோலை நெல் கொடுப்பதுடன் சரிகட்டுவது சரியாகாது. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இதற்கு மாறுபட்டு இருக்கிறது. வைக்கோல் மூன்றில் ஒரு பங்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுப்பது என்பது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்தச் சட்டம் அந்த வழக்கத்திற்கு மாறுபட்டிருக்கிறது.

உளுந்து, பயிறு போன்றவைகளில் ஏதாவது ஒரு பாகத்தை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுப்பதிலும் இந்தச் சட்டத்தில் இடம் இருக்க வேண்டும். இந்த காலத்தில் இட்டிலி, தோசைகளே ஜனங்களால் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய சிற்றுண்டியாக இருக்கிறது. இதற்கு உளுந்து தேவை. ஆதலால் இந்தப் பயிர்களின் விளைவில் ஒரு பாகத்தை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். பட்டணங்களில் உள்ள பெரிய நிலச்சுவாந்தார்களைவிட, சிறிய நிலச் சுவாந்தார்கள்தான் நிலத்தின்மீது நேரடியான கவனம் செலுத்திவருகிறார்கள். சொந்தப் பயிர்கள் இல்லாதவர்களுக்கும்கூட சுகஜீவனத்திற்கு

28th January 1956] [Sri G. Vagheesam Pillai]

தசு கூலி கொடுக்கிறார்கள். விவசாயிகள் நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் பாசன்டேஜ் கொஞ்சம் அதிகப்பட வேண்டுமென்பதுதான். அதாவது ஐந்து சதம் கூட்டிக் கொடுத்துவிட்டாலே அதன் மூலம் அதிகப்பலன் ஏற்படும். இரண்டு போகம் பயிரிடக்கூடிய நிலங்கள் ஏக்கர் நிலத்தில் இருந்து 30,000 ஏக்கர்களுக்கு வந்திருக்கிறது. தண்ணீர் வசதியுள்ள நிலங்களுக்கு எரு பூராவையும் கொடுத்துவிட்டால், விவசாயிகள் இரண்டுபோகம் நல்ல முறையில் உற்பத்தி செய்வதற்கு வசதி ஏற்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

SRI P. CHOKKALINGAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நியாயவார மசோதாவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாகுபடிச் செலவுகளையும் குடியானவர்களுக்கு ஏற்படும் இதர நஷ்டங்களையும் கருத்திற்கொண்டே வாரத்தை நிச்சயிக்க வேண்டுமென்று திட்டக்கமிஷன் கூறியிருப்பதை சர்க்கார் பூரணமாக ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இன்றைக்கு யார் யார் ஏழை மக்களாக இருக்கிறார்களோ, அவர்களுக்குச் சாதகமாகத்தான் எந்த சர்க்காரும் முடிவு பண்ணுவார்கள் என்பது அசைக்க முடியாத உண்மை. நீண்ட காலமாக விவசாயிகள் தங்களுக்கு வருவாய் ஒன்றுமில்லை, தங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது என்று கிளர்ச்சி செய்ததன் பலனாகவும், அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிற பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாகவும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். 12 noon.

பொது மகசூலிலிருந்துதான் வாரம் பிரிக்கப்படுகிறது என்ற முறையில், நிலச்சுவான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் தலைக்கு 50 சத விகிதம் பகிர்ந்து கொடுத்தால் நிலச்சுவான்தார்களுக்கு சாதகமாக இருக்கும். அவர்கள் அதை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று கூறுவது உண்மை அல்ல. இந்த மசோதா வாரத்தில் 40 சத விகிதம் மேல்வாரம்தாரருக்கும், 60 சத விகிதம் குடிவாரம்தாரருக்கும் கிடைக்கும் என்று நிர்ணயிக்கிறது. ஒரு நிலத்தில் நல்ல விளைவு கிடைக்க வேணுமென்றால் 40 சத விகிதம் செலவு செய்தாகவேண்டும். குடியானவர்கள்தான் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. குடியானவனுக்குக் கிடைக்கக்கூடிய 60 சத விகிதத்தில் 40 சத விகிதம் செலவுக்குப் போய்விட்டால், பாகி அவனுக்கு நிச்சயமாக கிடைப்பது 20 சத விகிதம்தான். ஆகையால் 50 சத விகிதம் வீதம் குடியானவனுக்கும் நிலச்சுவான்தாருக்கும் வாரம் நிர்ணயித்தால், எந்தப் பக்கத்தில் கணக்குப் பார்த்தாலும் விவசாயிக்கு உண்மையிலேயே செலவு போகக் கிடைப்பது 20 சத விகிதத்துக்கும் குறைவாக இருக்கும். அதற்குமேல் கிடைப்பதற்கு இடமே இல்லை.

மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். பூசாரத்தையும் கவனிக்க வேண்டும். நிலச் சுவான்தார்களின் நலனையும் கவனிக்க வேண்டியதுதான். ஆனால் தேசத்தினுடைய நலத்தை முதலில் கவனிக்க வேண்டும். தேசத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்க வகை செய்வதோடு பூசாரம் உயர்வதற்கும் வழி செய்தாக வேண்டும். ஏற்கனவே இருக்கிறபடி செலவும் பாதி, வாரமும் பாதியாக குடியானவர்களும் நிலச்சுவான்தார்களும் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பதை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவருவதுதான் வரவேற்கத் தக்கது. குடியானவர்களுக்கு மட்டும் செலவை விட்டுவிட்டு அவர்களுக்கு 60 சத விகிதம் நிலச்சுவான்தார்களுக்கு 40 சத விகிதம் என்று வாரத்தை நிர்ணயித்திருப்பது, விவசாயிகள் பூசாரத்தை உயர்த்த வழியில்லாமல் செய்துவிடும். பூசாரத்தை உயர்த்தி நல்ல பயிர் காணும்படி செய்தால்தான் தேசத்தில் உணவு உற்பத்தி குறையாமல் பெருகும் என்பது என் அபிப்பிராயம். நிலச்சுவான்தார்கள் விதை, உரம் முதலியவைகள் வாங்குவதற்காக குடியானவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்த கடன்களை இந்தச் சட்டம்

வருவதின் காரணமாக ஆத்திர மனோபாவம் கொண்டு, இனிமேல் கொடுக்க மறுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலை ஏற்படுமாயின் என்ன ஆகும் ? குடியானவர்கள் தங்களுடைய கடமையை எப்படி நிறைவேற்ற முடியும் ?

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் மிகவும் குறைவாக இருப்பதினால், நான் அதிகம் விளக்கிப் பேசவேண்டுமென்று விரும்பினாலும், என் பேச்சை சுருக்கிக் கொள்ளுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் என்னவென்றால், புண்ணுக்கு உப்பு போன்ற உரங்கள் பாதி, பாதி பகிர்ந்து கொள்ளுவது வழக்கமாயிருக்கிறது. அறுவடைக் கொத்தும் பாதி பாதி பங்கு போட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படியிருந்தால்தான் பூசாரம் உயர்வதற்கு வகை செய்ய முடியும். குடியானவர்களும் தங்களுக்கு மிராசுதார்கள் கொடுக்கக்கூடிய ஒரு பகுதி பணத்தை வைத்துக் கொண்டு நல்ல விதமாக பயிர் செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். இந்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

12-06 p.m. * SRI M. P. PERIYASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்த நியாயவார மசோதாவை ஆதரிக்கிறேன். அதே சமயத்தில் இதிலுள்ள சில குறைகளையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த வார சாகுபடி முறை சில ஜில்லாக்களில் அதிகமாக இருக்கிறது. சில ஜில்லாக்களில் இல்லவே இல்லை. இந்த வார முறையானது சில ஜில்லாக்களில் பெரும்பான்மையாக இல்லை. திருச்சி ஜில்லாவிலும், தஞ்சாவூர் ஜில்லாவிலும் இந்த வாரமுறையானது அதிகமாக இருந்து வருகிறது. இந்தச் சட்டம் அந்த ஜில்லாக்களுக்கு மிகவும் பொருந்தும். திருச்சி ஜில்லாவுடன் எனக்கு அதிகம் தொடர்பு உண்டு. அங்கு அமல் நடக்கும் இப்போதுள்ள சட்டமானது ரொம்ப நியாயமாக இருக்கிறது. அங்கே சில மிராசுதார்கள் சட்டம் வருவதற்கு முன்பே வழக்குகள் போட்டு ஏழை ஹரிஜனங்களை ஜெயிலுக்குக் கொண்டுபோயிருக்கிறார்கள். காட்டுப்புத்தூரில் அயலூரில் கூட கூலி வேலை செய்யும் முப்பது பெண்களின்மீது வழக்குப் போட்டு, அவர்கள் அபராதம் கொடுக்கும்படியும், அவர்களுக்கு ஒரு மாத ஜெயில் தண்டனைகூட கிடைக்கும்படியும் செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆகவே சில தினங்கள் கஷ்டப்பட்டாலும் கடைசியில் ஒரு நல்ல சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, நாமக்கல் தாலூகாவில் வாழை, கரும்பு முதலியவை பயிரிடப்படும் நிலங்கள்தான் மிக அதிகம் உண்டு. கொடிக்கால் பயிரும் உண்டு. அங்கே நெல் சாகுபடி செய்யும் நிலங்கள் மிகக் குறைவு. சில இடங்களில் ஒரு ஏக்கர் நிலத்தின் விலை ரூ. 6,000 ஆக இருக்கிறதென்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். என் தாலூகாவாகிய நாமக்கல்லில் கொஞ்சம் காவேரித் தண்ணீர் பாய்கிறது. அந்தப் பிரதேசம் கிட்டத்தட்ட 8,000 ஏக்கர் விஸ்தீர்ணம் உள்ளதாயிருக்கும். அந்த நிலங்கள் நான்கு, ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு ஏக்கர் ரூ. 20,000-க்கு விற்கப்பட்டு வந்தது. கொஞ்ச நஞ்சமல்ல. நான்கூட 20,000 ரூபாய் என்றவுடன் ஏழு, எட்டு ஏக்கராக இருக்குமென்று நினைக்கலாம். ரூ. 20,000-லிருந்து ரூ. 8,000-க்குக் குறைந்து இல்லை. இப்போது அரசாங்கம் சட்டம் கொண்டு வரப்போகிறது என்று தெரிந்தவுடன் எங்கள் தாலூக்காவில் அந்த நிலங்களின் விலை குறைந்துவிட்டது. அதேபோல் முன்பு குத்தகையும் ரூ. 1,000-க்கும், ரூ. 800-க்கும், ரூ. 600 கொடுத்து வந்தார்கள். ஆனால், இப்போது முன்பு ரூ. 15,000-க்கு விற்ற நிலங்கள் ரூ. 10,000 அல்லது ரூ. 9,000-க்கும், 6—7 ஆயிரம் வரையிலும் வந்துவிட்டது. ரூ. 1,000-க்குக் கொடுக்கப்பட்ட குத்தகை ரூ. 400 அல்லது ரூ. 500-க்கும் குறைந்துவிட்டது. அரசாங்கத்தார் ஏழைகளுக்கு சகாயம் செய்கிறார்கள் என்றவுடன் அந்த விலைகள் குறைந்துவிட்டன.

28th January 1956] [Sri M. P. Periyasamy]

ഇവറ്റയെല്ലാം പാർക്കുംപോതു ഇന്ത മശോതാവൈ ശീക്കിരം ചട്ടമാക്കി അമുലുക്കുക് കൊണ്ടുവര വേണ്ടിയതു അവശിയംതാൻ. ആനാൽ ജില്ലാവാരിയാകവാ, അല്ലതു എപ്പടി നിർണയിപ്പതു, എന്പതൈയെല്ലാം കൊഞ്ചം നന്ററക്ക് കവനിക്കവേണ്ടും.

അതോടുകൂട, വിവസായ വേലൈ ചെയ്യും കൂലികളിൻ വേലൈ നേരത്തൈ നിർണയപ്പടുത്ത വേണ്ടും. അവർകൾ വേലൈ ചെയ്യും നേരത്തിററുക്കുത് തകുന്തപടി അവർകളുക്കു ഊതിയം കിടൈക്കച് ചെയ്യവേണ്ടും. എങ്കൾ ഊരിൽ കൂലി വേലൈ ചെയ്പവർകൾ ജാസ്തി.

മേലും കുത്തകൈ നിലം ഇവ്വളവുക്കു മേൽ പോകക്കൂടാതു എന്ററു നിർണയപ്പടുത്ത വേണ്ടും.

ഇന്നൊൻ്ററു സൊല്ല വിരുമ്പുകിറേൻ. നിലക്കാരർകളുക്കു വരി പോട്ടുക്കൊണ്ടേ പോകിറോം. അതേ മാതിരി നിറൈയ വീടു വൈത്തിരുപ്പവർകൾ വിഷയത്തിലും കട്ടുപ്പാടു ചെയ്തു അവർകൾ വാങ്കും വാടകൈക്കു തകുന്തപടി വരി വിതിക്കലാം. വീട്ടു വാടകൈ ഇവ്വളവുതാൻ വാങ്ക വേണ്ടുമെൻ്ററു കട്ടുപ്പടുത്ത വേണ്ടും. ലേവാതേവിക്കാരർകളിലും കവനിത്തു വരി വിതിക്ക യോചനൈ ചെയ്യ വേണ്ടും. അമ്മാതിരിച് ചെയ്താൽ നിലക്കാരർകളേയേ ഇമ്മൈപ്പടുത്താമൽ ഇരുക്കലാം. ആകവേ അന്ത വരികളിലും പോടവേണ്ടുമെൻ്ററു കേട്ടുക്കൊണ്ടു എൻ്ററുടൈയ വാർത്തൈയൈ മുടിത്തുക് കൊൾകിറേൻ.

* SRI O. KORAN : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, മട്ടാദപ്പാട്ടം നിശ്ചയിക്കാൻവേണ്ടി ശവമേണ്ടു കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഈ ബില്ലു്, ഒരു കിയ വേളയിലാണെങ്കിലും, സ്വാഗതാർഹമാണ്. കൃഷിക്കാരുടെ വിഷമപ്രശ്നങ്ങൾ പരിഹരിക്കാൻ ശവമേണ്ടു സ്വമേധയാ കൊണ്ടുവന്നിട്ടുള്ള ഒരു ബില്ലല്ല ഇതു്. ഈ രാജ്യത്തെ കർഷകജനസംഖ്യയുടെ ഒരു വലിയ സംഖ്യയിതപ്രക്ഷോഭത്തിന്നു സമരങ്ങൾക്കും ശേഷമാണ് ഇപ്പോഴെങ്കിലും ശവമേണ്ടു ഇങ്ങനെയൊരു ബില്ലു് കൊണ്ടുവരാൻ തയ്യാറായിട്ടുള്ളതു്. തഞ്ചാവൂർ പണ്ണയാൾ സംരക്ഷണ നിയമം കൊണ്ടുവന്നതുതന്നെ പതിനായിരക്കണക്കിൽ കൃഷിക്കാരെ മിരാസ്ദാരന്മാർ ഒഴിപ്പിച്ചുകഴിഞ്ഞതിന്നുശേഷമാണ്. അതുപോലെതന്നെയാണ് ഈ നിയമത്തിന്റെ കാര്യവും. 12-10 p.m.

ഈ ബില്ലനുസരിച്ച് കൃഷിക്കാരന്റെ വിഹിതം 60 ശതമാനമെന്നും ജന്മിയുടെ വിഹിതം 40 ശതമാനമെന്നും അംഗീകരിക്കപ്പെട്ടിട്ടുണ്ട്. പക്ഷെ, ഇങ്ങിനെ അംഗീകരിച്ചിട്ടുണ്ടെന്നു പറഞ്ഞതുകൊണ്ടായില്ല. മലബാറിലെ ജന്മിമാർ മുൻകാലങ്ങളിൽ വളരെയധികം പാട്ടം പിരിച്ചിരുന്നു. എന്നാൽ, മലബാർ കുടിയാന്മാർ നിയമം ഭേദഗതി ചെയ്ത് പാട്ടക്കോടതികൾ ഏർപ്പെടുത്തിയശേഷം അതു വളരെയധികം വെട്ടിക്കുറക്കിയിട്ടുണ്ട്. അതിൽനിന്നു മനസ്സിലാക്കേണ്ടതു് ഇന്നുള്ള പാട്ടക്കടിശ്ശികകളെല്ലാം അമിതമായ പാട്ടം നിശ്ചയിച്ചിരുന്നതിന്റെ ഫലമാണെന്നാണ്. അതു വച്ചുനോക്കുമ്പോൾ സഖാവ് സി. എച്ച്. കണാരൻ ചൂണ്ടിക്കാണിച്ചതുപോലെ, പാട്ടക്കടിശ്ശിക റദ്ദു ചെയ്യേണ്ടതിന്റെ നീതി ബോദ്ധ്യപ്പെടുന്നതാണ്. ശവമേണ്ടു് മട്ടാദപ്പാട്ടം നിശ്ചയിക്കണമെന്നു തീരുമാനിച്ചപ്പോഴും പ്രശ്നത്തെ അടിസ്ഥാനപരമായി സമീപിച്ചു പരിഹാരം കാണാൻ ശ്രമിച്ചിട്ടില്ലെന്നു ചൂണ്ടിക്കാണിച്ചുകൊള്ളട്ടെ.

അമിതമായ പാട്ടംകൊണ്ടും കാലവർഷപ്പിഴകൊണ്ടും കൃഷിക്കാരൻ ഇന്നു കടത്തിലാണ്ടു് തകർന്നുകിടക്കുകയാണ്. കൃഷിക്കാരന്ന് നടവു നിവർന്നു കഴിയണമെങ്കിൽ അവന്റെ കടം വെട്ടിക്കുറക്കിയേ തീരൂ. ഇതു് ശവമേണ്ടിന്നുതന്നെ ബോദ്ധ്യമുള്ള കാര്യമാണ്. അതുകൊണ്ടണ കടം ശധുവുകളായി മടക്കിക്കൊടുക്കാനുള്ള ഒരു നിയമം ശവമേണ്ടു് കൊണ്ടുവന്ന് പാസ്സാക്കിയിട്ടുള്ളതു്. ഈ നിയമം കൊണ്ടുവന്നപ്പോൾ കൃഷിക്കാരന്ന മടക്കിക്കൊടുക്കാൻ കഴിയാത്ത കടങ്ങൾ റദ്ദുചെയ്യുന്നതിന്നുള്ള വ്യവസ്ഥകൂടെ ചെയ്യേണ്ടതായിരുന്നു. അതു ചെയ്യാതെ ഇത്തരം നിയമങ്ങൾ പാസ്സാക്കിയതുകൊണ്ടു് കൃഷിക്കാരന്റെ നിലയ്ക്കു് മാററമൊന്നും വരാൻപോകുന്നില്ല. ഓണം വന്നാലും ഉണ്ണി പിറന്നാലും കോരന് കഞ്ഞി കമ്പിളിൽതന്നെയെന്ന് പറഞ്ഞ കഥപോലെ

[Sri O. Koran] [28th January 1956

എത്രയൊക്കെ നിയമങ്ങളുണ്ടാക്കിയാലും കൃഷിക്കാരനു കടവും പട്ടിണിയുംതന്നെ. എന്താണിതിന്നു കാരണം? ഗവമേണ്ടു മുട്ടശാന്തിക്കു നിയമങ്ങളുണ്ടാക്കുന്നുവെന്നല്ലാതെ പ്രശ്നത്തെ അടിസ്ഥാനപരമായി സമീപിച്ചു പരിഹരിക്കാൻ ഇതുവരെ ശ്രമിച്ചിട്ടില്ല.

കർഷകത്തൊഴിലാളികൾക്കു എന്തെങ്കിലും സംരക്ഷണം നല്കാൻ ഗവമേണ്ടു ഇനിയും തയ്യാറായില്ലെന്നതുതന്നെ ഗവമേണ്ടു, പ്രശ്നങ്ങളെ അടിസ്ഥാനപരമായല്ല സമീപിക്കുന്നതെന്നതിന്നു തെളിവാണു്. കർഷകത്തൊഴിലാളികളുടെ പ്രവൃത്തിയേയും കൂലിയേയും സംബന്ധിച്ചുള്ള യാതൊരു വ്യവസ്ഥയും ഇന്നുവരെ ഉണ്ടായിട്ടില്ല. മഴയെന്നോ വെയിലെന്നോ നാവെന്നോ പകലെന്നോ ഇല്ലാതെ പാടത്തു കഷ്ടപ്പെട്ടു പണിയെടുക്കുന്ന കർഷകത്തൊഴിലാളികൾക്കു കുറഞ്ഞ കൂലിയും മററു സേവന വ്യവസ്ഥകളും നിശ്ചയിക്കാത്തതെന്തെന്നു ചോദിച്ചാൽ ഗവമേണ്ടിന്റെ അവഗണനയെന്നല്ലാതെ യാതൊരു സമാധാനവും പറയാനില്ല. ഫാക്ടറിത്തൊഴിലാളികൾക്കു കുറഞ്ഞ കൂലി നിശ്ചയിച്ചിട്ടുണ്ടു്. പ്രവൃത്തിസമയം ക്രിപ്പപ്പെടുത്തിയിട്ടുണ്ടു്. മററു അവകാശങ്ങൾ നിജപ്പെടുത്തിയിട്ടുണ്ടു്. എന്നാൽ, വെയിലും മഴയും തണുപ്പും സഹിച്ചു ചേററിലിഴയുന്ന കർഷകത്തൊഴിലാളിയുടെ കാര്യത്തിൽ ഗവമേണ്ടിന്നു ഇതേവരെ ഒട്ടും കാരുണ്യമുണ്ടായിട്ടില്ല.

കൃഷിക്കാരന്റെയും ജന്മിയുടേയും വിഹിതം നിശ്ചയിക്കുമ്പോൾ ഭൂമിയുടെ ഫലപുഷ്ടിയെ പരിഗണിക്കേണ്ടതുണ്ടു്. പഞ്ചാബുപോലെ ഫലപുഷ്ടിയുള്ള ഒരു പ്രദേശത്തു ന്യായമായിട്ടുള്ള ഒരു നിരക്ക് മലയാളിക്കു വരണ്ട പ്രദേശങ്ങളിൽ ന്യായമായിരിക്കുകയില്ല. എല്ലായിടത്തും ഒരേ നിരക്കു വയ്ക്കുന്നതു അത്തരം സ്ഥലങ്ങളുടെ ഫലപുഷ്ടിയും കൃഷിച്ചെലവും മററു പരിതഃസ്ഥിതികളും പരിഗണിച്ചുകൊണ്ടു് ന്യായമായ ഒരു വിഹിതം നിശ്ചയിക്കുകയാണു് ശരിയായിട്ടുള്ള നടപടി. കാവേരി ജലംകൊണ്ടും സ്വന്തമായുള്ള ഭൂമിയുടെ ഫലപുഷ്ടികൊണ്ടും കൃഷിച്ചെലവു് താരതമ്യേന കുറവും ആദായം കൂടുതലുമായിട്ടുള്ള തഞ്ചാവൂർ മുതലായ പ്രദേശങ്ങളിൽ ന്യായമായേക്കാവുന്ന ഒരു നിരക്കു് അത്തരം സൌകര്യങ്ങളൊന്നുമില്ലാത്ത മററു പ്രദേശങ്ങളിൽ ന്യായമായിരിക്കുകയില്ല. അതുകൊണ്ടു് ഫലപുഷ്ടിയുടെ അടിസ്ഥാനത്തിൽ ഭൂമിയെ വകതിരിച്ചു വേറെ വേറെ നിരക്കുകൾ നിശ്ചയിക്കണ്ടതാണു്. അല്ലെങ്കിൽ തെങ്ങിന്നും കവുങ്ങിന്നും ഒരുപോലെ തളപ്പുകെട്ടുന്നതുപോലെ ആപത്തായിത്തീരും. ഈ ഐക്യവേളയിലെങ്കിലും ഇങ്ങനെ ഒരു ബില്ലു് കൊണ്ടുവന്നതിൽ ഗവമേണ്ടിനെ അഭിനന്ദിക്കുന്നതോടൊപ്പം ഇപ്പറഞ്ഞ കാര്യങ്ങൾകൂടി വേണ്ടവിധം പരിഗണിച്ചു ബില്ലിൽ വേണ്ട വ്യവസ്ഥകൾകൂടി ഉൾപ്പെടുത്തി പാസ്സാക്കണമെന്ന അപേക്ഷിക്കുന്നു.

12–16 p.m. * SRI B. K. NALLASAMY: കനം ഉദവി സപാനായകർ അവർകളേ, ഇന്ത മശോതാവെ മുഴുമനതുടൻ വരവേററുച് ചില വാർത്തൈകൾ ചൊല്ല വിരുംപുകിറേൻ. ഇന്ത മശോതാ കുത്തകൈതാരുക്കു മികവും താരാളമാന പകുതിയെ വഴങ്കിയിരുക്കിറതു. ഇൻറു സപയിലേ ഇതറ്കു ഏകോപിത്ത വരവേററ്പു ഇരുപതിൽ ഇരുന്തേ ഇതെ നാം അറിന്തു കൊള്ളലാം.

കാങ്കിരസ് തേർതൽ വിഞ്ഞാപനത്തിലേ ഇന്ത നിയായവാര കുത്തകൈ നിർണയിപ്പതു എൻപതു മുക്കിയമാന ഇടം പെററിരുന്തതു. തേർതൽ വിഞ്ഞാപനത്തിലേ കാങ്കിരസ് കട്ചിയാർ മക്കളിടത്തിലേ എൻന ചൊൻനാർകളോ, അന്ത വാർത്തൈയൈക് കാപ്പാററ വേണ്ടുമെൻപതറ്കാകത്താൻ ഇന്തച് ചർക്കാർ ഇൻറൈക്കു ഇന്തച് ചട്ടത്തൈക് കൊണ്ടുവരുകിറതേ തവിര, എതിർക് കട്ചിക്കാരർകൾ ചൊൻനതൈപ് പോല അവർകളുടൈയ ഇളർച്ചിയിനാൽ ഇന്ത മശോതാ കൊണ്ടുവരപ്പടവില്ലൈ.

ഇന്ത മശോതാവിൽ കുത്തകൈതാരർകളുക്കു നല്ല മുറൈയിൽ നിയായം വഴങ്കപ്പട്ടിരുക്കിറതു. ആനാൽ ചില മാറുപാടുകൾ ഇന്ത ഷരത്തിക്കളിലേ ചെയ്യപ്പട വേണ്ടിയിരുക്കിറതു എൻപതൈയും തെരിവിത്തുക് കൊള്ള വിരുംപുകിറേൻ.

ഉതാരണമാക ഇതിലേ 'ഗ്രാപ്' 'പയിർ' എൻറു ഉപയോകപ്പടുത്തപ്പട്ടിരുക്കും ആങ്കിലപ് പതം കൊഞ്ചം കുഴപ്പത്തിററ്കു ഇടം കൊടുക്കിറതു എൻപതൈയും തെരിവിത്തുക് കൊള്ളുകിറേൻ. എങ്കൾ പക്കത്തിൽ ആററിലേ

28th January 1956] [Sri B. K. Nallasamy]

துலை வைத்துப் பயிர் செய்யக்கூடிய தோட்டப் பயிர்கள் அதிகம் உண்டு. இங்கே எல்லாம் ஒரே சமயத்தில் மூன்று பயிர்கள், நான்கு பயிர்கள் செய்வது வழக்கம். மஞ்சள், கரும்பு, நெல் இன்னும் வெங்காயம் போன்றவைகளை யெல்லாம் பயிர் செய்கிறார்கள். அப்படியிருந்தால், "அவற்றிலே எது பிரதான போகப் பயிர்? உப பயிர் எது?" என்று நிர்ணயிப்பது மிகவும் சிரமமாகப் போய்விடும். தோட்ட பூமிகளில் மேற்சொன்ன எல்லா பயிர்களும் முக்கிய பயிர்களாகையால் பிரதான போகப் பயிரின் 40 சத வீதம் நிலச் சொந்தக்காரர்களுக்கு என்றால் பெரிய தீங்கு ஏற்படும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக எங்கள் பக்கத்தில், அதாவது பணக் குத்தகையாக இருக்கிற இடத்தில் குத்தகைக்காரன் இந்தப் பயிர்தான் செய்யவேண்டுமென்று கட்டுப்படுத்தப்படுவது கிடையாது. விவசாய விளைபொருள்களின் விலைவாசிக் கேற்ப அவர்கள் லாபம் அதிகமாக வரும் பயிர்களை விளைவிப்பார்கள். ஏதப் பயிரை வேண்டுமானாலும் விளைவித்துக்கொள்ள அவர்களுக்குப் பூர்ண சுதந்திரம் உண்டு. இன்றைக்கு இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், சாகுபடிக்காரர்கள் ஏதாவது பயிரை முதலிலே விளைத்துவிட்டு, இதுதான் பிரதானப் பயிர் என்று சொல்லி அதன் விளைவை 40 சதவிகிதம் பணமாகவோ, தானியமாகவோ நிலச்சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டு, அதிக வெள்ளாமைப் பயிரை பிறகு சாகுபடி செய்துகொள்ள வசதி ஏற்படும். அப்பொழுது நிலச்சொந்தக்காரர்களுக்கு அதிகமான அநியாயம் ஏற்பட்டுவிடும். ஆகவே தான் நான்காவது ஷரத்தின் மூன்றும் பிரிவில் இரண்டு முக்கிய பயிர்கள் என்பதற்கு பதிலாக முக்கிய பயிர்கள் என்று வைத்துக்கொண்டு "இரண்டு" என்பதை எடுத்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மானாவாரி பூமியை எடுத்துக்கொண்டால் அதிலே கம்பு, எள், நிலக்கடலை போன்றவைகளைப் பயிர் செய்கிறார்கள். பருவமழை சரியாக இல்லாவிட்டால் கம்பளிப்பூச்சியினால் பயிர் நாசமாகிவிடும். எண்ணை வித்துக்கள் உள்ள பயிர்கள் பிழைத்துக் கொண்டுவிடுகின்றன. ஆனால் உணவுப் பொருள்கள் எல்லாம் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடுகிறது. இவற்றில் எதை முக்கியமான பயிராக வைத்துக்கொள்ளவேண்டுமென்பதில் சர்ச்சை வரும். ஆகையால் மானாவாரி பூமிகளுக்குப் உப பயிர் என்ற பாகுபாட்டையே எடுத்துவிடவேண்டும்.

அதுவும் இந்தமாதிரி பணக் குத்தகை அமுலில் உள்ள பிரதேசங்களில் எந்தப் பயிரை முக்கியமாகச் செய்யவேண்டுமென்பதற்கு நிலக்காரரும், குத்தகைக்காரரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற ஒரு ஷரத்து சேர்க்கப்படவேண்டும். நிலச்சொந்தக்காரர் தன்னுடைய நிலத்தில் இந்தப் பயிரைத்தான் பயிரிடவேண்டுமென்றால், அந்தப் பயிரை சாகுபடிக்காரர் பயிரிடுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

Sri R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே இப்போது சபையின் முன்னே கொண்டுவந்திருக்கும் நியாயவார மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதா வானது நம் நாட்டின் எல்லாமக்களும் நல்வாழ்வு நடத்துவதற்காகவும், பல சீர்த்திருத்த வேலைகள் இதன்மூலம் கொண்டுவரலாம் என்ற எண்ணத்தோடும் இதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எந்தக் கட்சியினரும் விருப்புவெறுப்பின்றி இதை ஆராய்ந்து முடிவு செய்வார்கள் என்று நினைக்கிறேன். இதனால் பணக்காரர்கள் என்றோ நிலப்பிரபுக்கள் என்றோ அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கவேண்டுமென்றோ இந்த மசோதாவைக் கொண்டுவரக்கூடாது. 12-20 p.m

ஜப்பானில் இதுமாதிரியாக நிலச்சீர்த்திருத்த மசோதா ஒன்று 13 தடவை அங்குள்ள சட்டசபைக்கு கொண்டுவரப்பட்டு இன்னும் நியாயமான சட்டம் செய்யப்படவில்லை என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்பு

[Sri R. Krishnaswami Naidu] [28th January 1956

கிறேன். இந்த நாட்டிலே விவசாயிகளுக்கான நிலச்சீர்த்திருத்த சட்டம் மிகமிக அவசியம். இந்த மசோதாவைக் கொண்டுவருதவற்கு முன்னால் "யானைவருமுன் பின்னே மணியோசைவரும் முன்னே" என்பதுபோல் நாட்டின் சுபிட்சத்திற்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் இந்தச் சட்டத்தால் ஏற்படலாம் என்ற கருத்தோடுதான் இதை முன்னே கொண்டு வருகிறார்கள் என்பது புலனாகிறது. ஆகையால் நடுத்தரவாழ்க்கை நடத்துவோர் நலிவிறுமல், எல்லாத் தரப்பினருக்கும் நியாயம் வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும், இதை விருப்புவெருப்பின்றி பொறுக்குக் கமிட்டியில் தர ஆராய்ந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு சிறு நிலச்சுவாந்தார்கள் மேலும் வளர்ச்சியடையக்கூடியதாகவும், அவர்களைப் பாதிக்கக்கூடாதவாறும் இருக்க முனையவேண்டும். சாதாரணமாக கிராமரந்திரங்களிலே சாகுபடியாளர்களுக்கு உரம் விதை முதலியவை கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமே தவிர, ஏழைகளின் முன்னால் இச்சட்டத்தைப்பற்றி பேசினால் பிரயோஜனம் இல்லை. நிலங்களுக்கு உரம், விதை வாங்குவதற்கான செலவுகளுக்கு கடன் கொடுக்கும் பொறுப்பு நிலச்சொந்தக்காரர்களுக்கு இருப்பது மிகவும் நலம். ஏனென்றால் நிலத்தின் சொந்தக்காரர்கள்தான் அதன் பொறுப்பை உணர்ந்தவர்கள். நிலத்தின் தரம், வளம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களுக்குத்தான் அதிகம் உண்டு. அவர்கள் தான் நிலத்தை உரமிட்டு கண்ணும்கருத்துமாக வளர்ப்பதிலே அக்கரை மிகக்கொண்டவர்களாக இருப்பார்கள். அந்த நிலத்திற்கு எவ்வளவு செலவாகும் என்ற பொறுப்பை உணர்ந்து அதற்கேற்ற கடனை கொடுக்க முன்வருவார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே இந்த உரமிடும் பொறுப்பையும், நிலத்திற்கு கடன் கொடுக்கும் பொறுப்பையும் நிலச்சுவான்தார்களுக்கே கொடுத்துவிடவேண்டும்மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதையெல்லாம் கலந்து ஆலோசித்து அவர்கள் பொறுப்பிலேயே விட்டுவிடவேண்டும். மேலும் அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு வாரங்களை நிர்ணயிக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். நிலச்சுவாந்தார்களும், விவசாயிகளும் கலந்தாலோசிப்பதற்கிடம் இருக்கவேண்டும்.

12-26 p.m. அப்பொழுதுதான் இவர்களுக்கு மத்தியில் இடைத்தரகர்கள் இல்லாமல் செய்வதற்கு எதுவாக இருக்கும். இவர்கள் இல்லாமல் இருப்பதற்கு எத்தனை ஏக்கர் என்ற வரம்பு நிர்ணயிக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் மிகவும் உழைத்து ஜீவிக்கக்கூடிய விவசாயிகளுக்கு சிறிது நன்மை ஏற்படும். அப்பொழுதுதான் இச்சட்டத்தின் மூலம் அவர்களுக்கு அனுகூலம் ஏற்படக்கூடும். ஆதலால் இவைகளையெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் நன்கு பரிசீலித்து நல்லமுறையில் சட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANYAM : நான் இந்தச் சபையில் விவாதத்திலிருக்கும் நியாயவார மசோதாவின் கொள்கையை மனப்பூர்வமாக வரவேற்று சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மசோதாவின் முக்கிய கருத்து நிலம் ஒட்டுகிறவர்களுக்கு 60 சத விகித வாரமும் நிலச்சுவான்தார்களுக்கு 40 சத விகித வாரமும் என்பதுதான். அதுதான் முக்கியமான பிரச்னை. அரசாங்கம் பல ஆண்டுகளாக நிலச்சீர்திருத்தம் செய்யப்போகிறோம். அடுத்தடுத்து பல திட்டங்கள் கொண்டுவரப்போகிறோம் என்று கூறிக்கொண்டிருந்தபோதிலும் இரண்டாவது கட்டமாக இப்பொழுதுதான் இந்த நியாயவார மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவைக் கவனிக்கும்பொழுது அரசாங்கத்தினுடைய எண்ணத்திலே தெளிவற்ற தன்மை இருக்கிறது அவர்கள் திட்டத்திலே உறுதியான நம்பிக்கை இல்லைதான் என்று கூறவேண்டியிருக்கிறது.

திட்டக்குழு ஒரு தனி மனிதன் வைத்திருக்கவேண்டிய நிலத்துக்கு ஒரு வரம்பு கட்டவேண்டுமென்று கூறியிருக்கிறது. அரசாங்கமும் தேர்தலின் பொழுது கட்சிக் கொள்கை நிலம் உழுபவனுக்கே என்ற கொள்கைதான் என்றும் சொல்லியிருக்கிறார்கள். திட்டக் கமிஷனும் அதையேதான் வற்புறுத்தியிருக்கிறது. தனி மனிதன் வைத்துக்கொள்ளவேண்டிய

28th January 1956] [Sri M. P. Subramanyam]

நிலத்துக்கு வரம்பு கட்டவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் உறுதியான நம்பிக்கையாக இருக்குமானால் அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். அரசாங்கம் சென்னை மாகாணம் பல துறைகளில் முற்போக்கிலிருக்கிறது என்று பெருமையாகப் பேசிக்கொள்ளுவதற்குத் தயங்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது நியாயவார மசோதாவிற்குப் பெரிய நிலச்சுவான்தார்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தக்கூடாது. அவர்களின் எதிர்ப்பைப் பார்க்கும்பொழுது நம் மாகாணம் இந்த விஷயத்தில் பின் தங்கியிருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கிறது. மற்ற மாகாணங்களிலும் நியாய வாரசட்டம் செய்திருக்கிறார்கள். நிலம் ஒட்டுகிறவர்களுக்கு 70 சத விகிதம் 80 சத விகிதம் என்றும் நிலச்சுவான்தார்களுக்கு 20, 30, 35 சத விகிதம் என்று வாரம் நிர்ணயித்திருக்கிறார்கள். இன்னும் சில இடங்களிலே நிலவரியைப்போல் 4, 5 மடங்குக்குமேல் குத்தகை இல்லை. இந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது நாம் பின் நோக்கியிருக்கிறோம் என்றுதான் கூறவேண்டும். பல துறைகளிலே முற்போக்காக சட்டம் செய்கிறோம் என்று சென்னை சர்க்கார் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும் விவசாயத் துறையிலே பிற்போக்கான நிலைமையிலிருப்பது வருந்தத்தக்க விஷயம்தான். திட்டக் கமிஷன் சிபார்சுகளை அரசாங்கம் உண்மையிலே நிறைவேற்ற உறுதி கொண்டிருந்தால் உடனடியாக அதைச் செய்யவேண்டும். மேலும் காலம் தாழ்த்திக்கொண்டிருந்தால் விவசாயத் துறையிலே சிக்கலான நிலைமை ஏற்படும். விவசாயத்துறையிலே அரசாங்கத்தின் தெளிவற்ற போக்கு என்ன நடக்குமென்ற உறுதி இல்லாத தன்மை உண்மையிலேயே வருந்தத்தக்கக்கூடிய விஷயமாகும். ஆகவே நியாய வார மசோதாவிற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ள வேண்டும், நிலம் உழுபவர்களுக்குச் சொந்தமாகவேண்டுமென்ற அடிப்படை கண்ணோட்டத்திலே இந்தப் பிரச்னையை அணுகியிருக்கவேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நாட்டிலே பார்க்கும்பொழுது பெரிய நிலச்சுவான்தார்கள், விவசாயத்துறையில் மாத்திரம் கவனம் செலுத்தி ஒருவன் வைத்துக் கொள்ளும் நிலத்துக்கு வரம்பு கட்டவேண்டுமென்று சொல்லுவதுபோல், மற்ற துறைகளிலும் வரம்பு கட்டவேண்டுமென்றும், நிலச்சுவான்தார்கள் உரிமையில்மட்டும் அரசாங்கம் கைவைப்பது தவறு, ஒரு சாராருக்கு மட்டும் வரம்பு கட்டக்கூடாது என்று கிளர்ச்சி செய்கிறார்கள். விவசாயத்துறையாலன்றி மற்ற துறைகளிலும் வரம்பு நிர்ணயிப்பது அவசியம்தான். ஆனாலும் இந்தச் சட்டத்தைக் கைவிடவேண்டுமென்று கோருவது மிகவும் பிற்போக்கான தன்மை, காலம் கடத்தும்போக்கு என்று அவர்கள் உணர வேண்டும். விவசாயத்துறையைப்போல், மற்ற துறைகளிலும் விரைவிலே கூடுமானவரை உடனடியாக சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது இந்த சட்டத்தைக் கைவிட எந்த விதமான நியாயமுமில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலத்தில் உழைப்பவர்களுக்கு இந்த மசோதா நியாயம் வழங்கவில்லை. நாட்டில் பெரும்பாலானவர்கள் அன்றாடக்கூலிக்கு வேலை செய்யும் விவசாயத் தொழிலாளிகளாக இருந்துவருகிறார்கள். அவர்கள்தான் நிலத்தை உழுது பயிர் செய்கிறார்கள். அவர்களால் தான் நிலத்தின் தரம் உயர்கிறது. அவர்கள்தான் நிலவளமும், நீர்வளமும் பெருக்கச் செய்கிறார்கள். நிலச்சுவான்தார்களையும் குத்தகைக்காரர்களையும் மனதில் வைத்துக் கொண்டு அரசாங்கம் இந்த மசோதாவைக்கொண்டு வந்திருக்கிறார்கள், தவிர, நிலத்தில் நேரிடையாக கூலிக்காக வேலை செய்பவர்களுக்கு நியாயம் வழங்கவே இல்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கிராமத்திலும் 100 நிலச்சொந்தக்காரர்கள் இருந்தால் 100 குத்தகைக்காரர்களும் இருப்பார்கள். நிலச்சுவான்தார்களுக்கும் குத்தகைக்காரர்களுக்கும் பெருத்த பாகுபாடு இல்லாவிட்டாலும்கூட நிலத்திலே அன்றாடும் ஏரும் மாடும் பிடித்து வேலை செய்யும் கூலியாட்களுக்குத் தான் நியாயம் வழங்கவேண்டுமென்பது என் போன்றவர்களுடைய கோரிக்கை. ஆகவே இந்த மசோதாவைக் கொண்டுவரும் காலத்திலே அன்றாட

விவசாயக் கூலிகளுக்கு ஒரு திட்டவட்டமான அன்றாட கூலியை இந்த மசோதாவிலே நிர்ணயிக்கவேண்டியது அவசியம் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

12-31 p.m. **Sri R. S. ARUMUGAM :** தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் இந்த சபையில் ஒரு முக்கியமான பிரச்னை எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. சென்ற நான்கு ஆண்டுகளாக விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக ஒரு நல்ல சட்டத்தை இயற்ற வேண்டுமென்று என்போன்றவர்கள் இந்த சபையில் பேசிவந்திருக்கிறார்கள். அதற்கேற்ப சர்க்காரும் நன்றாக ஆலோசனை செய்து ஒரு நல்ல மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கொண்டுவரவேண்டிய சட்டத்தை மூன்று அம்சங்களாகப் பிரித்திருக்கிறார்கள். முதன் முதலில் விவசாயியை நிலத்தைவிட்டு வெளியேறக்கூடாதென்று சட்டம் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து விவசாயத்திலே ஒரு புரட்சிகரமான சீர்திருத்தத்தைச் செய்ததனால் ஏற்படும் பெருமை இந்த மந்திரி சபையைச் சாரும்போது, அதே சமயத்தில் இந்த சபையில் அங்கத்தினர்களாக இருக்கும் நமக்கும் அந்தப் பெருமை உண்டு என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அடுத்தப்படியாக இந்த நியாய வாடகை மசோதாவை இப்போது இந்த சபை முன்பு கொண்டுவந்திருக்கிறார்கள். நிலத்தில் மிகவும் பாடுபட்டு உழைக்கும் விவசாயிகள் போதிய ஊதியம் கொடுக்கப்படாததால், மிகவும் கஷ்டப்பட்டுவந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே, அவர்களுக்கு போதிய வருமானம் கிடைக்கச்செய்வதற்கு, ஒரு நல்ல வாரம் நிர்ணயித்தாக வேண்டுமென்று இப்போது இந்த சபை முன்பு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை நாம் எல்லோரும் அலசிப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதை எல்லாம் பார்த்துவிட்டு மிராசுதார்கள் என்ன கிளர்ச்சிகள் எல்லாம் செய்யமுடியுமோ அவைகளையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு மிராசுதார் இந்தச் சட்டத்தை பத்திரிகையில் பார்த்தவுடன் மூச்சே நின்றுவிட்டது என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஒரு கெட்ட எண்ணம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. பெரிய பெரிய வக்கீல்களும் பல ஆதாரங்கள் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிக்கு இன்று வாழ்வளிக்கக் கூடிய சட்டத்தைக் கொண்டுவந்தாகவேண்டும். ஆகவே தயவுசெய்து இந்த மசோதாவிற்கு எதிர்ப்புக் கூறுவதில் இறங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஏக்கர் நிலத்திற்கு களை எடுப்புக்கு செலவு ரூ. 2 தான் ஆகும் என்று சொல்லுகிறார்கள். இந்த நாட்டில் களை எடுப்புச் செலவு ரூ. 2 தான் ஆகும் என்று சொல்வது விநோதமாக இருக்கிறது. கிட்டத்தட்ட சாகுபடிச் செலவு ரூ. 200 ஆகும். இவற்றையெல்லாம் நன்றாகக் கணக்கெடுத்துத்தான் நிலச்சுவானுக்கு 40 சத விகிதமும் விவசாயிக்கு 40 சத விகிதமும் மகசூலில் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் சொல்லுகிறார்களே தவிர நிலச்சுவான்தார்களுக்கு தீமை செய்யவேண்டுமென்பதற்கில்லை. எங்கு வேண்டுமானாலும் பாருங்கள். எங்கேயாவது கிராமத்தில் விவசாயி காரை வீடு கட்டியிருக்கிறானா என்று பாருங்கள். எங்காவது வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள், சீட்டுப் பிடிப்பவர்கள் முதலியவர்கள் தான் கட்டியிருக்கலாம். ஏழை விவசாயிகள் நல்வாழ்க்கை வாழ்வது கிடையாது. அவர்களுக்கு கணிசமான அளவு வருமானம் கிடைப்பதற்கு அரசாங்கத்தார் ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். ஆகவே இந்த மசோதாவை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழை விவசாயிகள் இரவு வேளையில் வயலில் ஆட்டுக்கடை போடுகிற இடத்தில் மிருகங்களுக்குப் பக்கத்தில் மிருகங்களைப் போல் படுத்து கஷ்டப்படுகிறார்கள். அறுவடை நாளன்று நல்ல காலம் வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அறுவடை நாளோ விவசாயிகளுக்கு துக்க நாளாக வருகிறது. ஆகவே இந்த மசோதா இந்த சபையில் வந்திருக்கும் தினம் ஒரு நன்னாள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

28th January 1956]

*SRI P. S. NALLA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஆனால் அதிலே விரும்பப்படாத அம்சங்களும் இருக்கத்தான் செய்கிறது. 12-36 p.m.

இந்த சபையில் பேசக்கூடிய அங்கத்தினர்கள் பொதுவாக விருப்பு வெறுப்பு இல்லாமல் பேசுவது தான் முறை. நமது எதிர்க்கட்சி மெம்பர் ஒருவர் சொன்னார், தங்களிலே இரண்டொருவரைத் தவிர நிலம் படைத்தவர்கள் யாரும் கிடையாது என்பதாக. இந்த ராஜ்யத்திலே சொந்தமாக நிலம் படைத்திராத அவர்கள் தான் மிகவும் தீவிரமாக இந்த மசோதாவின் விவாதத்திலே பங்கெடுத்துக்கொண்டு காரசாரமாகப் பேசுகின்றார்கள். ஆகவே இதிலே சம்பந்தமுடையவர்கள் யாரோ அவர்களுக்கு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்கும், தங்களுடைய நிலைமையை அனுசரித்துப் பேசுவதற்கும் நிறைய சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இந்த மசோதாவைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்படும் பொறுக்குக் கமிட்டியில் பலதரப்பட்டவர்களும் இருக்கவேண்டும். விவசாயிகளாக இருந்தாலும் சரி, கூலி வேலை செய்யக் கூடியவர்களாக இருந்தாலும் சரி, நிலச் சொந்தக்காரர்களாக இருந்தாலும் சரி அவரவர்களுடைய நிலைமையை எடுத்துப் பேசுவதற்கு எல்லா தரப்பாருக்கும் இடம் கொடுக்க வேண்டும்.

இந்த மசோதா இப்படியே சட்டமாக வருமானால் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும். சிறிதளவே நிலம் உடைய விதவைகள், மைனர்கள் முதலியோருக்கு, மிகுந்த கெடுதலையும் உண்டுபண்ணும்.

சில மெம்பர்கள் யாருக்குமே இந்த மசோதாவிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படக்கூடாது என்பதாகச் சொன்னார்கள். விதிவிலக்கு அளிக்கப்பட்டால் துஷ்பிரயோகம் செய்வதற்கு அந்த ஷரத்து மிகவும் உதவியாகப் போய்விடும் என்றும் சொன்னார்கள். எந்தச் சட்டத்தைச் செய்தாலும் அந்தச் சட்டத்தை யாரும் சிறிதளவுகூட துஷ்பிரயோகம் செய்வதில்லை என்று சொல்லமுடியாது. ஆகவே அப்பாவிகளாக இருக்கக்கூடிய இவர்களுக்குக்கூட இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்படக்கூடாது என்று சொல்வது நியாயமில்லை.

இப்பொழுது கொண்டு வந்திருக்கும்படியான சட்டத்தில் உள்ளபடி குத்தகை நிர்ணயம் செய்யப்பட்டால் தோட்டக்கால் பூமி போன்றவைகளை உடையவர்கள் அந்த பூமியை மேலும் அபிவிருத்தி செய்வதில் சிறிதளவு கூட அக்கறை காட்டமாட்டார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நில சொந்தக்காரருக்கும், குத்தகைதாரருக்கும் மகசூலை எங்கே, எப்பொழுது பிரித்துக்கொள்வது என்பதில் கஷ்டம் ஏற்படும். பருத்தி, மிளகாய் போன்ற விலை பொருள்கள் ஒவ்வொரு வாரமும் சேகரம்செய்ய வேண்டும். நில சொந்தக்காரர் அங்கேயேயிருந்து பிரித்துக்கொள்வது முடியாது. சபையில் பேசிய சில அங்கத்தினர் நிலம் உடையவர்கள் ஏதோ பெரிய குற்றத்தை செய்துவிட்டவர்கள் போலும், சாகுபடி செய்பவர் குற்றமே எதுவும் புரியாது, தேவலோகத்திலிருந்து வந்திருப்பவர் போலவும் பேசினார்கள். பெரும்பாலான இடங்களில் இப்பொழுது எழுதிக் கொடுத்த குத்தகைச் சீட்டுப்படி பலர் குத்தகை கொடுப்பது கிடையாது. குத்தகையை கொடுப்பதற்கு முன்னேயே மகசூலைவிற்று சாப்பிட்டுவிடுகிறார்கள். சொத்துள்ளவன் மனைவி மக்கள்மேல் தன் சொத்தை எழுதி வைத்து விடுகிறான். ஆதனால் குத்தகையே வசூல் செய்ய முடியாமல் போய்விடுகிறது. குத்தகையைக் கண்டிப்பாய் வசூல் செய்வதற்கு வேண்டிய வசதிகளை இந்தச் சட்டத்தில் நிலச் சொந்தக்காருக்கு கொடுக்க வேண்டும்.

தோட்டபூமியை எடுத்துக்கொண்டால், கிணறு வெட்டுதல், மிஷின் வாங்குதல், மின்சார மோட்டார் வாங்குதல் போன்றவைகளுக்கு அதிக பணம் முதலீடு நிலசொந்தக்காரர்போடவேண்டியிருக்கிறது. சிலவு செய்த தொகைக்கு வட்டியாவது கட்டிவந்தால்தான் நில சொந்தக்காரர்

[Sri P. S. Nalla Gounder] [28th January 1956

பூமியைப் பண்படுத்த பிரியப்படுவார். இல்லாவிட்டால் பண்படுத்த நிச்சயம் முற்படமாட்டார். ஆகவே நில சொந்தக்காரருக்கு சேரவேண்டிய பகுதியை 40 சத விகிதம் என்பதை அதிகப்படுத்தவேண்டும்.

தோட்ட பூமிகளில் சோளம், கம்பு, ராகி, பருத்தி, புகையிலை, மஞ்சள் போன்ற பல பயிர்கள் செய்வதால் எது பிரதான பயிர், எது ஊடு பயிர் என்பதில் கஷ்டம் ஏற்படும். ஆகவே எல்லா விளை பொருள்களிலும் நில சொந்தக்காரருக்கு பங்கு இருக்கவேண்டும்.

ஐந்து வருஷங்களுக்கு முன் இரு போகம் செய்திருந்தால் தான் நில சொந்தக்காரருக்கு இரு போகப் பயிரில் பங்கு உண்டு என்று இல்லாமல் எப்பொழுது இரு போகம் செய்திருந்தாலும் இனி செய்தாலும், பங்கு கிடைக்க வேண்டும்.

எப்பொழுது வேண்டுமானாலும் சொந்தக்காரர் விரும்பினால் சொந்த விவசாயம் செய்ய நில சொந்தக் காரருக்கு உரிமை இருக்கவேண்டும்.

மசோதாவில் உள்ள குறைகள் குறைய, இப்பொழுது இருந்து வரும் குத்தகையில் மொத்தத்தில் இத்தனை விகிதம் குறைத்து வசூலிக்கலாம் என்று செய்வது நலம்.

* SRI P. VENKATESHA SHOLAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நில வார மசோதாவை ஆதரித்து, அதே சமயம் நிலச்சுவாந்தர்களை எதிர்த்து நீண்ட நெடுங்காலமாக போராடிய விவசாயிகளுக்கு வெற்றி என்று சொல்லிக்கொண்டு சிலவார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது விவசாயிகளுக்கு எந்த அளவு அனுகூலம் செய்யவேண்டுமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு ஆதரவு அளித்து விட்டதாக ஒத்துக்கொள்ள முடியாது. இப்பொழுது சாகுபடி செய்யும் செலவும், மராமத்து செலவும் மிராசுதாரர்களுடையது என்று திட்ட வட்டமாக இந்த சட்டத்தில் குறிப்பிடவில்லை. தற்போது இருப்பது மிராசுதாரர்கள் செய்ய வேண்டிய செலவுகளெல்லாம் விவசாயிகளின் தலையின்மேல் விழுமே தவிர, மிராசுதாரர்களை ஒன்றும் பாதிக்காது. இது மராமத்து செலவு திட்ட வட்டமாக மிராசுதாரர்களுக்கு மாற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நிலத்திலிருந்து ஏழை விவசாயிகளை வெளியேற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். எனக்கு தெரிந்த மட்டில் கூத்தாநல்லூர் மிராசுதார்—250 வேலி நில முள்ளவர். 300 விவசாயிகளை வெளியேற்றி இருக்கிறார்கள். இன்னும் இருக்கும் 15 விவசாயிகளை வெளியேற்றுவதற்கு ஏற்பாடாகிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் போலீஸ்காரர்கள் உடந்தையாகயிருக்கிறார்கள். மிராசுதாரர்கள் தூண்டுதலின் பேரில் விவசாயிகளுக்கு போலீஸ்காரர்களின் தொந்தரவு அதிகமாக இருக்கிறது.

(Mr. Speaker in the Chair.)

சாதாரணமாக இந்த சாகுபடிகாரர்களிடம் இருக்கும் நிலத்திற்கு தாசில்தார் சரியானபடி கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் இங்குயிருக்கும் பெரிய நிலத்திமிங்கிலங்கள் விவசாயிடமிருந்து பறிபோய் விடும் என்பதற்கு சந்தேகமேயில்லை. ஆதலால் அங்கு சாகுபடியாளர்களைப் பற்றிய கணக்கு ரிஜிஸ்டர் ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி திட்ட வட்டமாக ஒரு கணக்கு வைக்கா விட்டால் கொஞ்சம் உரிமை கொஞ்சமாக இருந்தாலும் மிராஸ்தாரர்கள், குத்தகைக்காரர்களை வெளியேற்றி விடுவார்கள் என்பது திண்ணம். ஆதலால் நில வரம்பு ஏற்பட வேண்டும். அப்படி நிச்சயிப்பதன் மூலமாகத்தான் வருங்காலத்திலாவது விவசாயிகள் நன்மை அடைய முடியும். ஆதலால் இதை யெல்லாம் கருத்தில்கொண்டு ஆராய்ந்து திட்ட வட்டமான சட்டம் இயற்றினாலொழிய விவசாயிகளுக்கு ஒரு விதமான நன்மையும் ஏற்படாது என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

28th January 1956]

* SRI S. LAKSHMANA GOUNDER : கனம் சபா நாயகர் அவர்களே, நான் இந்த மசோதாவைப் பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் விவசாயி என்ற முறையில், இங்கு பண்ணையாள் என்று சொல்லப்படுகிறது சில இடங்களில் பாதகமாக நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நிலச்சுவான்தார்களிடத்தில் மாதவாரியோ அல்லது வருஷவாரிக் கூலிக்கோ இருப்பவர்கள் பண்ணையாட்கள் வாரக் குத்தகைக் காரர்களிடத்தில் வேலை செய்கிறவர்களை பண்ணையாட்கள் என்று சொல்லுவது சரி அல்ல. அந்தப் பண்ணையாட்கள் இந்த சட்டத்தை வைத்துக் கொண்டு தாங்களே வார சாகுபடி அல்லது குத்தகைக்கு சாகுபடி செய்வதாக முடிவுக்கு வரும் சந்தர்ப்பத்தில் கலவரம் ஏற்படும் ஆகையால், பண்ணையாள் என்பதை வார சாகுபடிகாரர் அல்லது குத்தகைக்காரர் என்று திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 12-44 p.m.

நிலத்தின் தரம் ஒவ்வொரு ஜில்லாவிலும் வெவ்வேறு விதமாக இருக்கிறது. சில ஜில்லாக்களில் வருஷம் பூராவும் பெரிய ஆறுகளின் மூலம் நீர்ப்பாசன வசதி இருக்கலாம். சில ஜில்லாக்களில் ஏரிகளின் மூலம் பாசன வசதி கிடைக்கலாம் மற்றும் சில இடங்களில் கிணறுகளின் மூலம் குழாய்களின் மூலம்தான் தண்ணீர் கிடைக்கலாம் சில ஜில்லாக்களில் மழை பெய்தால்தான் வேளாண்மை என்ற நிலைமையும் இருக்கிறது. ஆகவே, நிலங்களை தரம் வாரியாகப் பிரித்து வாரம் நிர்ணயம் செய்ய வேண்டும் அப்பொழுது தான் தரத்திற்குத் தகுந்தபடி வாரம் நிர்ணயிக்க முடியும் எல்லா இடங்களிலுள்ள நிலங்களையும் ஒரே மாதிரியாகச் சேர்த்து விடக் கூடாது உதாரணமாக சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் மழை பெய்தால்தான் விவசாயம் செய்ய முடியும். ஆகவே ஆங்காங்கு முக்கியமான பிரதேசங்களில் விவசாயத்தில் நல்ல பக்குவம் அடைந்தவர்களை அனுப்பி விசாரித்து தரத்தை நிர்ணயம் செய்து அதன்பேரில் வாரத்தை நிர்ணயித்தால் இந்த மசோதா நல்ல முறையில் அமையும் அப்படியல்லாமல் ஏரிப்பாசனத்தால் சாகுபடி செய்யும் நிலங்களையும், ஊற்றுப் பாசனத்தால் சாகுபடி செய்யும் நிலங்களையும், ஆற்றுத் தண்ணீரினால் சாகுபடி செய்யும் நிலங்களையும் ஒன்றாகச் சேர்க்கக் கூடாது. அவைகளைப் பரிசீலனை செய்து தரம் வாரியாகப் பிரித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, பண்ணையாள் என்று சொல்லுவது அவசியமில்லை யென்றும், நிலக்குத்தகைக்காரர் அல்லது வார சாகுபடிக்காரர் என்று திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டொரு வார்த்தை சொல்ல எனக்குச் சந்தர்ப்பம் அளித்த சபா நாயகருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI C. KANDASAMY : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவை பொதுப் படையாக வரவேற்று, ஆனால் அதே சந்தர்ப்பத்தில் இதை பொறுக்குக் கமிட்டிக்கு விடாமல் சட்டசபையிலேயே விவாதித்து சட்டமாக்க வேண்டுமென்ற அடிப்படையில் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவை ஏன் பொறுக்குக் கமிட்டிக்கு விடக்கூடாது என்றால், இந்த மசோதாவை இந்த சபையில் தெரிந்தோ தெரியாமலோ கொண்டு வந்திருக்கக்கூடிய காலம் சரியானதாக இல்லை என்பதை வற்புறுத்திக்கூறுகிறேன். இப்பொழுது அறுவடை காலம் ஆகிவிட்டது. சட்டம் எப்ரல் 1-ம்தேதி வருகிறது என்று சொன்னால் இந்த அறுவடைக்குப் பயன்படப் போவதில்லை என்பது தெள்ளத் தெளிவானது. ஆகவே அடுத்த வருஷம் அறுவடைக்குத் தான் பயன்படும். இடைக்காலத்தில் எட்டாளவில்தான் அமலில் இருக்குமே தவிர யதார்த்தாத்தில் அமலில் இருக்காது. சில மாதங்களுக்கு முன்பு கொண்டு வந்திருந்தாலாவது இந்த வருஷ அறுவடை காலத்திலேயே அமலுக்கு வந்திருக்கும். இந்த வருஷத்திலேயே பயனளித்து விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதாவது, காலம் கடத்தினால் இடைக்காலத்தை மிராசுதாரர்கள் பயன் படுத்திக்கொண்டு

பொருளாதாரத்துடிப்பினால் மிராசுதாரர்கள் வரப் போகும் சட்டத்தை எவ்வளவு தூரம் பயனளிக்க முடியாமல் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் காரியங்கள் செய்வதற்கு அவர்களுக்கு சக்தி உண்டு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சர்க்கார் தரப்பிலிருந்து கொண்டு வரப் பட்டுள்ள மசோதா இது என்பதை மறந்து அந்தப் பக்கத்திலுள்ள பல அங்கத்தினர்கள் பேசியதைப் பார்த்தேன். முன்னாள் அமைச்சர் ஸ்ரீ பழனிசாமி கௌண்டர், ஸ்ரீ கருத்திருமன் முதலியவர்கள் "ஏக்கருக்கு ரூபாய் 7,000 வீதம் விலை கொடுத்து நிலங்கள் வாங்கப்பட்டிருகின்றன. "Turn over வேண்டும்" என்றும், ஏதோ, "private sector", என்றும் சொல்வதில் பிரயோஜனமில்லை. இப்போது அகில இந்திய சர்க்காருக்கு ஒரு கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் "நாட்டின் பொருளாதார நிலைமையில் மாற்றங்கள் கொண்டு வர வேண்டும். சகல ஜனங்களுக்கும் வாழ்க்கையில் போதிய வசதிகள் அளிப்பதற்கு பொருளாதார மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதற்காக இத்தகைய சீர்திருத்தங்கள் அவசியம்" என்பதை அவர்கள் யோசித்துப் பார்த்தால் அத்தகைய காரணங்கள் கூற மாட்டார்கள் என்று நினைக்கிறேன். எவ்வளவு பணம் போடப்பட்டிருக்கிறது, எவ்வளவு வட்டி கிடைக்க வேண்டும் என்பது பிரச்னை அல்ல; "private sector" என்பது பிரச்னை அல்ல. பணம் போட்டிருப்பதற்கு லாபம் வேண்டுமென்றால், "காலை என்றோ, மாலை என்றோ, வெயில் என்றோ, மழை என்றோ, சக்தி யென்றோ, பாராமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் விவசாயிக்கு சோற்றுக்குப் பணம் வேண்டாமா" என்று அவர்கள் யோசித்துப் பார்த்தார்களா என்பது தெரியவில்லை. ரூபாய் 6,000-க்கு வட்டி வேண்டு மென்று அவர்கள் சொன்னார்கள் என்றால், பண்ணையாளுக்கு கஞ்சியாவது தினந்தோறும் கிடைக்க வேண்டாமா என்று அவர்கள் யோசிக்கவேண்டும் என்றுதான் நான் பதில் சொல்லக்கூடிய முறையில் பொதுவாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவது மிகவும் வரவேற்கத்தக்கது. அதை அவசியம் செய்தாகவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. அதை யாரும் தடுத்துநிறுத்தமுடியாது. ஆனால் அதே சமயத்தில் நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் முறையில் எனக்கு ஆக்ஷேபம் இருக்கிறது. இதற்கு நான் சொல்லக்கூடிய காரணங்களை கவனித்தால் நான் சொல்வது சரி என்பது விளங்கும். ஏதாவது சில பேர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும் என்று பாக்காமல் குடியானவனுக்கு வேண்டிய அளவு சலுகை கொடுக்கப்படவில்லை. தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நிலச் சீர்திருத்தம் இன்றியமையாதது என்பதை ஒப்புக்கொள்ளும்போது, கிராம சமுதாயத்தில் எல்லாப் பகுதிகளுக்கும் மாற்றம் ஏற்படும்படி சீர்திருத்தம் செய்யக்கூடிய சமயத்தில் திட்டத்திட்டான நிலச்சீர்திருத்தம் அவசியமாகிறது. அப்படிப்பார்க்கும்போது, முதலில் நிலத்திலிருந்து விவசாயி வெளியேற்றப்படாமலிருப்பதற்கும், பிறகு விவசாயிக்கு நியாயமான வாரம் கிடைப்பதற்கும், பிறகு நில உடைமைக்கு வறம்பு கட்டுவதற்கும், படிப்படியாகச் சட்டம் இயற்றுவது அவசியமாகிறது. ஒரே சமயத்தில் எல்லாச் சீர்திருத்தங்களையும் கொண்டுவந்தால் பிற்போக்கு சக்திகள் அவற்றைச் சிதறடித்துவிடும் என்பதைச்சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிற்போக்கு சக்திகளான மிராசுதாரர்கள் தங்களுடைய தந்திரோபாயங்களை உபயோகிக்கிறார்கள். இதுவிஷயத்தில் சற்று நன்றாக யோசிக்கவேண்டும். அப்போதுதான் கோளாறுகள் நன்கு விளங்கும். விவசாயிகள் படிக்காதவர்கள் ஆகவே அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். தஞ்சாவூர் பண்ணையார் சட்டம் அமலில் இருக்கும் இடங்களில் விவசாயிகள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி அந்தப் பக்கத்திலிருந்து பேசிய ஸ்ரீ நாராயணஸ்வாமி நாயுடு, ஸ்ரீ எம். சி. முத்துக்குமாரசாமி முதலியவர்களே நன்கு எடுத்துக்காட்டினார்கள். அதற்குக் காரணம் நிர்வாக இயந்திரம் சரியாக இல்லை என்று அவர்கள் சொல்வது உண்மை.

28th January 1956] [Sri C. Kandasamy]

ஆகவே இந்த சட்டங்களினால் விவசாயிகள் எல்லோரும் குறைந்த பட்ச பலனையாவது அடையவேண்டுமானால், வாரம், குத்தகை இவற்றிக்கு வைத்துக்கொள்ளக்கூடிய நிலத்தின் அளவை எல்லா விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்தமாக நிர்ணயிக்கக்கூடிய ஒரு சட்டம் வரவேண்டும்.

அது மாத்திரமில்லை. ஏன் ராஜாஜி அவர்கள் தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தை ஒரு அவசரச் சட்டமாகப் பிறப்பித்தார்கள்? அதற்குக் காரணம் என்னவென்றால், சட்டம் வரப்போகிறதென்று முன் கூட்டியே தெரிந்தால், அதில் இருக்கக்கூடிய சட்ட நுணுக்கங்களைப் பயன்படுத்திக்கொண்டு, மிராசுதார்கள் வரப்போகும் சட்டம் சரியாக அமல் நடக்கமுடியாதபடி செய்து விடுவார்கள் என்பதுதான். முன்கூட்டியே விவசாயிகள் அவர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றிவிடுவார்கள் என்று தெரிந்துதான் ராஜாஜி அவர்கள் அவசரச் சட்டமாகக் கொண்டுவந்தார்கள். ஆனால் இப்போது கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவில் இருக்கக்கூடிய சட்ட நுணுக்கங்களைப் பற்றி மிராசுதார்கள் முன்கூட்டியே கூடிப் பேசி எவ்வளவோ காரியங்கள் செய்வதற்கு இரண்டு, மூன்று வருஷ காலம் வாய்தாக் கொடுத்து விட்டு, இப்போதுதான் சபை முன்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது சட்டமாகவும் இந்த வருஷ அறுவடைக்குப் பிறகுதான் அமலுக்கு வரப் போகிறது. அதற்குள் இடைக்காலத்தில் மிராசுதார்கள் பத்திரங்கள் விஷயத்தில் எவ்வளவு மாறுதல்கள் செய்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். சப-ரெஜிஸ்டிரார் ஆபீஸில் எவ்வளவு பத்திரங்கள் மாற்றப் படுகின்றன. எவ்வளவு பினாமி பட்டாக்கள் பதிவு செய்யப்படுகின்றன. எவ்வளவு சொத்துக்கள் மாற்றப் படுகின்றன என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். கணக்கு ஸர்வேயில் எவ்வளவு பேர்கள் குத்தகைதார்கள் இல்லை என்று பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். "மசோதா கொண்டுவந்துவிட்டோம்" என்று சொன்னாலும் விவசாயி படிக்காதவன் என்பதைக் கவனிக்கவேண்டும். இந்த நாட்டின் வாழ்வுக்கு அஸ்திவாரமாகவும், அளவுகோலாகவும், இந்த நாட்டின் ஜன நாயகத் தூணாகவும், அரசாங்கத்தை ஏற்படுத்துபவனாகவும், அரசாங்கத்தை மாற்றக்கூடியவனாகவும் விவசாயிதான் இருக்கிறான் என்பதை கவனிக்க வேண்டும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, வரும் சட்டத்திலாவது அவனுக்குக் கிடைக்கவேண்டிய சலுகைகள் உண்மையாகக் கிடைக்கும்படியான முறையில் சட்டம் கொண்டுவரவேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும். அவசரச்சட்ட ரூபமாகக் கொண்டுவந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். ஸென்ஸஸில் 40 அல்லது 30 சதவிகிதத்தினர் தான் விவசாயத் தொழிலாளிகளாக இருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது அவர்களுடைய நிலைமை எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்கவேண்டும்.

மேலும் இந்த 60 பங்கு 40 பங்கு சட்டம் மிகவும் பிரபல மாக்கப்பட்டிருக்கிறது. யதார்த்தத்தில், நடைமுறையில் இருக்கக்கூடிய பழக்கவழக்கங்களின் படி வாரம் என்று சொல்வதற்குள்ள கருத்தின்படி இந்த மசோதாவில் கொடுக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். நடைமுறையில் உள்ள பழக்க வழக்கப்படி அறுவடைச் செலவுபோக பாக்கியைத்தான் மிராசுதார்களும் விவசாயிகளும் வாரமாகக் பிரித்துக்கொள்வது பரம்பரையாக உள்ள வழக்கம். அந்த வழக்கத்திற்கு பதிலாக அந்தச் செலவுகளையெல்லாம் விவசாயி ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லி, விவசாயிக்கு 60 பங்கு என்று கொடுப்பது சரியல்ல. அதனால்தான் அத்தச் செலவுகளையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்க்கும்போது, விவசாயிக்கு 55 பங்கும், மிராசுதாருக்கு 45 பங்கும் கொடுக்கக்கூடிய சட்டம் என்று செல்வதுதான் யதார்த்தம். அப்படியின்றி, விவசாயிக்கு 60 பங்கென்றும், மிராசுதாருக்கு 40 பங்கென்றும் இந்த முறையில் நிர்ணயித்திருப்பது தப்பான மனோபாவத்தைத்தான் உண்டாக்கும். ஏதோ விவசாயிக்கு மிக அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்ற தப்பபிப்பிராயத்தைத்தான் ஏற்படுத்தும். இது நீதி வழங்காது என்று நான் கூற விரும்புகிறேன்.

[Sri C. Kandasamy] [28th January 1956

12-57 p.m. இன்னொரு விஷயம். ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கும் சர்வே எல்லாம் தவறானது என்பது நமக்குத் தெரியும். இந்தச் சட்டம் வரும்போது ஏழை குத்தகைதாரன், பங்குதாரன் இவ்வளவுதான் குத்தகை அளந்து வந்திருக்கிறேன் என்று காட்டுவதற்கு தக்க பதிவு இல்லை.

ஆகவே குத்தகைதாரராகப் பதிவு செய்து கொள்வதற்கு ஒரு கால கட்டம் கொடுத்து, அதைப் பிரகடனப்படுத்த, வசதி செய்யவேண்டும். இதையும் கனம் மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். ஏற்கெனவே எடுக்கப்பட்ட சர்வே எந்த அளவுக்குத் தவறாக நடந்திருக்கிறது என்பதைப்பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நாங்கள் ஏதோ சிறிய பட்டாதாரர்களின் மீது கருணையில்லாமல் விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்று சொல்வதைப் போலச் சிலர் குறிப்பிட்டார்கள். அது அல்ல எங்கள் நோக்கம். ஒரு நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற குடியானவர்களுக்கு அதிலிருந்து வரும் வருமானம் அதிகம். அதேசமயத்தில் ஒரு வேலிக்குக் குறைவாக நிலமுடையவர்களிடமிருக்கும் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற குடியானவர்களுக்கு வருமானம் குறைவு என்றால், இரண்டு குடியானவர்களுக்கும் வாழ்க்கை நிலை ஒன்றாக இருக்கும்போது, வாயும் வயிறும் ஒன்றைப்போலவே இருக்கும்போது இவன் எப்படி சம்மாய் இருப்பான் என்பதையும் கவனிக்க வேண்டும். நாங்கள் ஏதோ அதிக வாரம் வாங்குவதற்காகவோ, நிலம் ப்படைத்தவர்களை எல்லாம் திருவோடு தாங்கி தெருவோடு போங்கள் என்று சொல்வதற்காகவோ இப்படியெல்லாம் பேசவில்லை. உண்மையதார்த்தத்தை எடுத்துச் சொல்லுகிறோம். இன்றைக்கு நூறு எக்கருக்கு மேல் சாகுபடி செய்வதற்கு தஞ்சாவூரில் இருக்கும் நிலத்தைக் குத்தகை எடுத்திருக்கிறார் பொள்ளாச்சியிலிருக்கும் ஒரு செட்டியார். இந்த மாதிரியான நிலைமையை எல்லாம் நாம் ஏன் தடுக்கக்கூடாது? அதைப்போலவே நிலச்சுவாந்தார்கள் பர்சனல் கல்டிவேஷன் என்று சொல்லி ஆயிரக்கணக்கான ஏக்கரை தங்கள் சொந்தப் பார்வையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை எல்லாம் ஏன் தடுக்கக்கூடாது? ஆகவே இந்த மசோதாவிலேயே ஒருவர் இவ்வளவு தான் சொந்த சாகுபடிக்கு நிலம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று வரம்பு கட்டியாக வேண்டும். அப்பொழுதுதான் இந்தச் சட்டத்தினால் அதிகப் பயன் உண்டு என்றும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விஷயம். முன்பு நிலவெளியேற்றத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அதற்கு ஒரு வருஷம்தான் ஆயுள். இப்பொழுது இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இது அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஐந்து வருஷம் வரையிலும் இந்தச் சட்டம் அமுலில் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஐந்து வருஷத்திற்குள் அந்த நில வெளியேற்றத் தடுப்புச் சட்டம் காலாவதி ஆகிவிடுமாதலால், மறுபடியும் தொடர்ந்து அந்த நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் ஆயுள் நீடிக்கப்படுமா, பாடாதா என்பன போன்ற விவரங்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நிலத்திலிருந்து எந்த விவசாயியும் வெளியேற்றப்படமாட்டான் என்ற உரிமை முதற்படியாக வழங்கியாகவேண்டும். அதற்கான உத்திரவாதமும் இருக்கவேண்டும்.

அதேபோல மனைக்கட்டி, கோயில் நிலங்கள் முதலியன பற்றி ஸ்ரீமான் நாராணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பெரும் பகுதி நிலம், மனைக்கட்டு முதலியவைகள் மடங்களுக்கும், தேவஸ்தானங்களுக்கும் இருக்கின்றன. பல நகரங்களிலேயே கூட அவர்களுக்கு மனைக் கட்டுகள் இருக்கின்றன. இம்மாதிரியான மனைக்கட்டுகளிலிருந்து பலர் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். இவர்களை வெளியேற்றுவதற்காகவே மனைகள் தகர்கப்பட்டுவருகின்றன. இவற்றை எல்லாம் தடுக்கவும் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லவிரும்புகிறேன்.

28th January 1956] [Sri C. Kandasamy]

இன்னும் சில பேர் இங்கே பேசும்போது சிறு நிலச்சுவாந்தார்களுக்கு அனுதாபப்படுவது போலப் பேசினார்கள். ஏதோ விதவைகள் வயோதிகர்கள் என்பதாக எல்லாம் இருந்தால் என்னால் புரிந்து கொள்ளமுடியும். அதைவிட்டு ஊரிலேயே இருக்கக்கூடிய சிறு நிலச்சுவாந்தார்கள் தாங்களே அந்த நிலத்தில் பாடுபடவில்லை என்றால் காரணம் என்ன ? ஒன்று அவர்கள் சுகஜீவிகளாக இருக்கவேண்டும் அல்லது இன்னொரு இடத்தில் வேறு பிழைப்பு உடையவர்களாக இருக்கவேண்டும். சுகஜீவிகளாக உட்கார்ந்து கொண்டு உட்கார்ந்த இடத்திலேயே சாப்பிடவேண்டுமென்று சொன்னால், அதற்காக உழைக்கின்ற விவசாயிகளை வயிற்றில் அடித்து இவர்களுக்கு அதிக வரும்படி கொடுக்கவேண்டுமென்று சொல்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இந்த நாட்டில் பிறந்த எல்லோரும் உழைத்துச் சாப்பிடவேண்டுமென்று சொல்லும்போது அவர்களை ஏன் உழைக்கவேண்டுமென்று வற்புறுத்தாது அதிக வரும்படி அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லவேண்டும் ? அதேபோல வேறு பிழைப்பு உடையவர்களுக்கும், இதிலிருந்து வரும் வருமானம் குறையக்கூடாது என்று சொன்னால் அதையும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே தான் உண்மையிலே பெரும்பாலான சிறு நிலச்சுவாந்தார்கள் இந்த இரண்டு வர்க்கத்திலேயே வருவதால் விதிவிலக்கு அளிக்கக் கூடாது என்று சொல்லுகிறோம்.

அடுத்தபடியாக ஒரு மனப்பான்மையைப் பார்க்கவேண்டும். முன்பு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தில் சாகுபடிகாரர்களுக்கு 40 பெர்சண்ட் என்றபோது 35 பெர்சண்ட் கொடுத்தால் போதும் என்றவர்கள் இன்றைக்கு சாகுபடிக்காரர்களுக்கு 60 பெர்சண்ட் என்னும்போது 55 பெர்சண்ட் கொடுத்தால் போதாதா, 50 பெர்சண்ட் கொடுத்தால் போதாதா என்று வாதமிடுகிறார்கள். எப்படியாவது கெஞ்சிக் கூத்தாடி விவசாயிகளுக்குச் சேரவேண்டியதை கொஞ்சமாவது பறிப்போம் என்ற இந்த மனப்பான்மை தவறு. ஏன் இன்றைக்கு இதைச் சொல்லுகிறேன் என்றால் சாகுபடிக்காரர்களுக்கு அதிக வருமானம் வருகிறது என்றால் ஏன் எல்லோரும் நிலத்தலே பாடுபட்டு உழைத்துச் சாப்பிடும் கூட்டத்தாராகச் சேரக்கூடாது என்று கேட்கிறேன். உட்கார்ந்து கொண்டு, உழைப்பவர்களின் வருமானத்தையெல்லாம் சுரண்டி சாப்பிட்டுக் கொண்டு நாங்கள் சுகஜீவிகளாகத்தான் இருப்போம் என்றால் அந்த நிலைமை இனியும் நீடிக்காது. அந்தக் கொள்கை இந்தக்காலத்திற்கு இனிமேல் பொருந்தாது என்றுதான் சொல்ல விரும்புகிறேன். அவர்களும் தைரியமாக வயலில் இறங்கி உழைக்க முன் வரவேண்டுமே தவிர சமூகத்தின் புல்லுருவிகளாக இருக்கமுடியாது என்பதை அவர்கள் உணர்ந்தாக வேண்டும். நான் இப்படிச் சொல்வதைப்பற்றி யாரும் தவறாகவும் நினைத்துக் கொள்ளக்கூடாது என்று கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தினால் நல்ல பயன் ஏற்படவேண்டுமானால், எழக்கூடிய தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்காக அமைக்கப்படும் கோர்ட்டுகளும் நன்கு அமையவேண்டும். ஏழை எளிய மக்களின்பால் கருணையுடையவர்கள் எல்லாம் அதில் இடம் பெறவேண்டும்.

எனக்கு நன்றாகத்தெரியும், பல இடங்களிலே மிராசுதார்கள் மகாநாடு போட்டு இந்த மசோதாவை ஒரேயடியாக எதிர்க்கிறார்கள் என்பதாக எல்லாம் பேப்பரிலே வருகிறது. இந்த மகாநாடுகள் எல்லாம் ஒருவர் வீட்டுக்குள்ளே இருபது முப்பது பேர்கள் சேர்ந்துகொண்டு போடப்படும் வெறும் கூச்சல்தான். தைரியமுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் பொது மேடைகளில் ஏறி மக்களின் மத்தியில் இன்று இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லட்டும் என்றுதான் நான் அறைகூவி அழைக்கிறேன். ஆனால் பொதுமக்களின் மத்தியில் பேசுவதற்கு அவர்களுக்குத் துணிவு ஏற்படவில்லை என்றால் அவர்களுக்கே நன்றாகத் தெரியும் தாங்கள் சொல்லுகின்ற வாதம் வெறும் பிடிவாதம்தான் என்பது. ஆகவே இம்மாதிரியான கூக்குரல்களுக்கு எல்லாம் சர்க்கார் பயந்துவிடாது, இந்தச் சட்டத்தை நல்லமுறையில் பொறுக்குக் கமிட்டியில் விவாதித்து சீக்கிரத்திலேயே

சட்டசபையில் கொண்டுவந்து பாஸ் செய்ய வேண்டுமென்பதாகச் சொல்லிக் கொண்டு நான் அமர்கிறேன். எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்தமைக்கும் தலைவருக்கு வணக்கம்.

1 p.m. * SRI V. C. PALANISAMI GOUNDER : Sir, I want to make a personal explanation.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஸ்ரீ வி. கந்தசாமி அவர்கள் ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட் அண்டு ரீசனைப்பற்றி சொன்னார். நான் இந்த மசோதாவிலுள்ள Statement of Objects and Reasons-ஐ படித்துவிட்டு தான் பேசுகிறேன்.

It is stated in the Statement of Objects and Reasons appended to the Bill : 'It is one of the directive principles of State policy as embodied in the Constitution that the State shall strive to promote the welfare of the people by securing and protecting as effectively as it may, social and economic justice.' Mark the words 'people' and 'social and economic justice'. 'People' means not the tenants only or the mirasdars only but every section of the people. I spoke as a representative of the people as a whole and let me drive home to the hon. Member opposite that I did not take the brief of one section or the other. I spoke with a full sense of responsibility and let me impress upon him that I have read the Statement of Objects and Reasons.

ஒரு விஷயம். இந்த பிரைவேட் செக்டாரிலே தக்காவி லோன் வாங்க முடியாதபடி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு இந்த மசோதாவிலிருந்து ஜஸ்டிஸ் வேண்டுமா, வேண்டாமா என்று சொன்னேன். இதற்காக நான் மிராசுதார்களிடம் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The Hon. Revenue Minister will reply to the debate.

SRI S. KANDASAMI GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் நியாயவார மசோதாவை ஆதரித்து சில விஷயங்களைப் பேசவேண்டும் என்பது என்னுடைய அவா.

MR. SPEAKER : விவாதம் முடிந்துவிட்டது. தாங்கள் தயவுசெய்து உட்காரவேண்டும். இப்பொழுது கனம் மந்திரி அவர்கள் பேசுவார்கள்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am glad to state that this Bill was on the whole well received. Before I go into other points, I want to refer to a point raised by the hon. acting Leader of the Opposition. During the few minutes that he spoke, I found that he was blowing hot and cold. He started by saying that there was no need for referring this Bill to a Select Committee and pleaded for enacting the Bill into law forthwith. As he proceeded, he said that the tenants being illiterate people, they should not be put to the difficulty of going to the Court and that therefore the law should be made as simple and easy as possible. It is exactly for that very reason of avoiding complications and difficulties that the Bill is being referred to a Select Committee. It is only at the Select Committee stage that we could improve the framework of the Bill and set right any lacunal or defects.

28th January 1956] [Sri M. A. Manickavelu]

I submit that it is absolutely necessary even from the standpoint of the Members opposite that this Bill should go to a Joint Select Committee. As regards the other points made by hon. Members in this House, they can all be easily dealt with at the Joint Select Committee stage and not in the open House. 1-10 p.m.

Sir, the debate was not strictly confined to the provisions of the Bill. The debate covered a very wide range. Hon. Members made reference to ceiling personal cultivation house-sites and also to the taking over of lands after paying compensation to owners. I submit that at present we should confine ourselves to the provisions of the Bill. Discussion regarding ceiling, etc., would not be quite pertinent at this state.

As regards fair rent, there were two diametrically opposite views. One view was voiced forth, mostly from the other side, that the tenant's share was not sufficient, and that it should be increased. No doubt the Planning Commission have recommended that the target should be 75 per cent. We have now fixed it at 60 per cent. We must understand the existing circumstances in our State and do the right thing. I would bring to the notice of hon. Members the ratio of rent that was prevailing in our State. For instance, in Tanjore district, the ratio that was obtainable to the tenants a few years ago was anything between 20 and 30 per cent. In certain places like Kumbakonam taluk, it was as low as 20 to 30 per cent. By the passing of the Tanjore Pannayals Act, we raised the tenant's share to 40 per cent. Now, we have put it at 60 per cent. We have stepped up the tenant's share from 40 per cent to 60 per cent. In fact it is three times more than what the tenants in some parts of Tanjore district were getting a few years ago. Also when we consdier the ratio fixed in other States like Bengal, Bihar, and Bombay, we see that our ratio compares favourably with the ratio there. It may be a little more or a little less. But our ratio is not far from the ratio obtaining in other States. Hon. Members on behalf of landowners have stated that we are giving too much to tenants by way of a share in the produce and that it ought to be less. To them I would say that the share of the tenant in Tanjore district was very low before but in other districts, for instance, North Arcot, Chingleput and Coimbatore, the division of produce was more or less half and half. Therefore the present increase of 10 per cent for the tenant is not at all very much. In some areas I know it was even 60 per cent to the tenant and 40 per cent to the landowner. Therefore, I submit that we have not gone far away from the existing state of things. We have come to a very reasonable ratio in fixing the fair rent. I would submit that the occupation of agriculture is a very difficult one. In fact I consider that it is the most difficult profession compared to other professions. Here the man who cultivates the land works on it day and night, and he does not have the advantage of the various beneficial provisions vouchsafed to other profession. One or two hon. Members described very graphically how arduous the task of a cultivator was. Considering all this, we can give the agriculturists any amount of the produce

[Sri M. A. Manickavelu] [28th January 1956

possible. But we must be practicable and we must be fair. It so happens that the return in certain professions is more and in certain other it is less. There are varying degrees of return. Return from agriculture is not the same as that in other professions. It is much less than that in other walks of life.

Then, Sir, certain general remarks were made. I will take them one by one now. Then hon. Member, Sri Ramalingam, suggested that credit facilities should be arranged for the cultivators. I entirely agree with him, because till now it was the responsibility of the landowner to take steps to improve the land by manuring it, etc. This incentive to improve the land will to a certain extent be lessened now, because the landowner's share has become less. I am anxious that the tenant should put a very good slice of the increment in his share on the improvement of the land. But I am afraid whether he will do it, because he, not still being the owner of the land, will try to take as much of the produce as possible, and may perhaps also dissipate the extra amount in certain ways that will not be very useful for the improvement of the land. Therefore, it will be necessary that not only he conserves as much of the extra amount as possible, but he also requires a little more money for the improvement of the land like liberal manuring, etc. It is necessary that credit facilities should be given to him. The Government have already moved in the matter and have already taken steps to organize co-operative societies and other agencies to afford cheap credit to cultivators. I think a week or two ago some of my Hon. Colleagues had opened co-operative societies which would afford greater credit facilities to the agriculturists. If these credit facilities are forthcoming in a larger measure, the credit problem will be solved.

One hon. Member said that whatever might be the share fixed for the tenant, the landowners must be assured of 6 per cent return on their investment. I should think that it is rather a very high percentage. In other investments too, it is not regularly we get a return of 6 per cent. In this connection, I may tell the House that in Ootacamund last summer, the landholders' representatives met the Sub-Committee and suggested that if they were assured of a return of 3 to 4 per cent, they would be satisfied. The very landholders and their representatives themselves had stated that. They consider this a fair and reasonable return. That being so, to expect a return of 6 per cent is rather too much.

Another hon. Member said that instead of this method of sharing the produce, a flat increase of 25 per cent on the existing contract rent could be given. It looks very simple and easy. It is attractive. But there are difficulties in the way. The Government also thought of fixing the fair rent on the basis of assessment. Bombay State has done it. But there are difficulties in the matter. It will entail hardship on certain categories of land. Ours is a more scientific way of dividing the produce, and the division will take place on the exact produce of the land. The other methods are

28th January 1956] [Sri M. A. Manickavelu]

only theoretical which will have no relation to the actual produce of the land. That is why they were given up and we adopted this method.

Then, another hon. Member mentioned that the landowner must have a proper return for his money invested on land. Now, there are two divergent views. One view is that the landholder simply because he happens to be in possession of the land should not expect a great return from it. The other view is that because he has invested money on the land he must get a return. But what is forgotten here is that it is not in all cases that the land has come to a person by inheritance. It must be noted that land passes from one person to another by way of sale and other kinds of transfer. Sale means that money is given for the land. Therefore, in such a case a person does not get the land free. Naturally, he must be compensated for the money that he has invested on the land. In the old days some zamindars got lands for some service or as reward. But now many years have passed and the land is not in the hands of the original grantee. The land has passed hands and money has been paid for that. So, we have to take that fact into account and will have to provide for a legitimate return for the money invested. It is not as though the land has come from the sky. 1-20 p.m.

The hon. Member from Chingleput wanted that a Committee should be appointed to go into all these questions. Well, a number of committees have already gone into this question. I do not think that at this time of the day we should again think of committees. That stage is over. The present stage is to consider the recommendations made by various committees and come to a right and just conclusion. There is no scope for any more committee being appointed.

Reference was made to the agricultural year and it was also said that we were now in the month of January, harvesting was already going on and that the provisions of this Bill would not apply to that. When the month of April was fixed, the idea was that this Bill would take effect from the year commencing then. The present harvest is a result of the work in the previous year. We never meant that this Bill should apply to this. It should apply to the harvest and other cultivation operations which will take place from April 1956. Generally, hon. Members object to retrospective effect being given to Bills. Now, it is handy for them and they want retrospective effect to be given to this Bill. That is not fair. This Bill should apply only to activities in the prospective year.

Very persuasive reference was made to straw. I also feel sympathetic about that, but that is a question that will be gone into at the Select Committee stage. If the hon. Members feel that some share at least may be given, then that may be considered. This applies to cash crops also.

[Sri M. A. Manickavelu] [28th January 1956

It was asked, ' This Bill will benefit the tenant, but what about agricultural labourers? ' It was stated that they would be getting the old wages and there would be no improvement. Apart from the fact that the fixing of fair wages for the agricultural sector is under consideration, I wish to state here that any improvement in the matter of sharing of the produce will have a bearing on the scale of wages also. If a particular improvement is effected in one way, it has got its repercussion on allied occupations. So, here also if tenants get a larger share, he cannot but give a little more to the labourer. It may not be a proportionate increase. Still, the agricultural labourer will get a little more. But how much he will get depends upon other circumstances. As I have already said, we are thinking of bringing in a Bill regarding payment of wages to agricultural labourers.

The ex-Minister from Coimbatore drew my attention to the provision with regard to the fixation of fair rent in the case of dry land. On wet lands, we know what the principal crop is. But on a dry land, we cannot fix what the principal crop is. Every crop is a principal crop or is not a principal crop on a dry land. Sometimes cholam is raised, sometimes ragi and sometimes cumbu. So, it requires further consideration and that will be looked into by the Select Committee.

It was also pointed out that the benefit would go to the intermediaries and not to the tenant. From a perusal of the provisions and the definition of the term ' cultivating tenant ', I submit that there is not much scope for the intermediary to exploit the situation. I think the term ' cultivating tenant ' is fairly well defined and therefore, the benefit will go to the bona fide tenant. If it requires further amendment and if any change of phraseology is required, we can look into it at the Select Committee stage.

Now, I have got a fairly rough idea of what the views of the House on this matter are. Therefore, I request that the House may pass my motion. The following members of this House are proposed for the Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
" M. A. Manickavelu.
Sri K. Rajaram.
" M. S. Mogral.
" G. Narayanaswami Naidu.
" R. S. Arumugam.
" A Vaikuntam.
" V. R Nagarajan.
" S. Panchaksharam.
" P. B. K. Rajachidambaram.
Sri A. Sambasivam.
" P. G. Karuthiruman.
" C. Kandasamy.
" S. Ramalingam.
" S. S. Kolkebail.
" M. Dharmalingam.
" S. Swayamprakasam.
" M. Kandaswami Kander.
" M. Manicksundaram.
" D. Dasarathan.

MR. SPEAKER: Is the hon. Member, Sri Ramalingam, pressing his amendment?

SRI S. RAMALINGAM : Yes, Sir.

MR. SPEAKER : I shall then put the amendment to vote.

28th January 1956]

* SRI K. PARTHASARATHY : Sir, I have already raised a point of order that the amendment of the hon. Member, Sri Ramalingam, is contrary to the provision of rule 93 that no memeber other than the member in charge of the Bill can move such a proposition.

MR. SPEAKER : Will the hon. Member clarify his point? As the rule stands, I do not see how the amendment is not in order. 1-30 p.m.

* SRI K. PARTHASARATHY : Sir, the member-in-charge of the Bill—in this case the Hon. the Minister for Revenue—has proposed the motion. The rule clearly states that no motion that a Bill be taken into consideration or be passed shall be made by any member other than the member-in-charge of the Bill. Hon. Member, Sri Ramalingam, has moved an amendment that the Bill be taken into consideration. Even a motion that the Bill be referred to a Select Committee cannot be moved by any member other than the member-in-charge except by way of amendment to a motion made by the member-in-charge. In this case, the hon. Member cannot move that the Bill be taken into consideration even by way of amendment to the motion because that will restrict the motion to refer the Bill to a Select Committee. Sir, my submission is that no member other than the member-in-charge of the Bill can move a motion that the Bill be taken into consideration. Because, that violates rule 93 of the Assembly Rules. That is a very valuable privilege as no legislation can be hastened, without the concurrence of the ruling party.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I think rule 93 does not come into the picture at all. It is said, 'the member-in-charge of the Bill'. He may be a member sitting on the Treasury Benches or he may be a member sitting on the other side. Any member can move a Bill. That is why it is stated 'member-in-charge of the Bill' in rule 93. The point for consideration is this. 'No motion that a Bill be taken into consideration or be passed shall be made by any member other than the member-in-charge of the Bill.' That is one thing. 'No motion that a Bill be referred to a Select Committee or be circulated or recirculated for the purpose of eliciting opinion thereon shall be made by any member other than the member-in-charge except by way of amendment to a motion made by the member-in-charge.' That is another thing. It is for consideration now whether the phrase 'except by way of amendment to a motion made by the member-in-charge' refers to the first part or both the parts of this rule. The first part, viz., 'No motion that a Bill be taken into consideration or be passed shall be made by any member other than the member-in-charge of the Bill' is complete by itself. If it was thought that this should govern the other part also, then it was not necssary to repeat the phrase, '. . . . any member other than the member-in-charge . . . .' This could have been brought forward to the second part. Then, it may be said that all these things will apply to both the parts. But, our intention is that

the first part should end by itself and the second part should be a separate thing. That is why there is a repetition of the phrase, '. . . . any member other than the member-in-charge . . in the second part also. I am inclined to think that the phrase 'except by way of amendment to a motion made by the member-in-charge' will refer only to a Select Committee. Therefore I fail to see how the amendment will not be in order and how rule 93 will be against it. I am sure you will take this aspect also into consideration when you give your ruling.

* SRI S. RAMALINGAM : Sir, when the mover of a Bill makes the motion that the Bill be taken into consideration, the House has a right to refer it to a Select Committee. So also, an individual Member, whether he is in the Treasury Benches of the other side, can move that a Bill be referred to a Select Committee. In any case, it is for the House to decide whether the Bill should be taken into consideration at once or whether it should be referred to a Select Committee. That is why I have moved a motion that the Bill may be taken into consideration. It is now for the House to take a decision. That is my submission, Sir.

MR. SPEAKER : The phrase 'No motion that a Bill be taken into consideration or be passed shall be made by any member other than the member-in-charge of the Bill . . .' relates to an independent motion. When a member-in-charge of a Bill actually moves a motion, it is open to another member to move an amendment also. Therefore, the amendment will be in order.

Is the hon. Member pressing his amendment?

SRI S. RAMALINGAM : Yes, Sir, I am pressing my amendment.

MR. SPEAKER : The question is—

"*For* the words 'that the concurrence of the Legislative Council be obtained for setting up a joint Select Committee of both the Houses to consider the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, and that the following Members of the Legislative Assembly be selected to serve on such Joint Select Committee', *substitute* the following :—

'that the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, be taken into consideration at once.'"

The amendment was put and lost.

MR. SPEAKER : I shall now put to vote the motion moved by the Hon. the Minister for Revenue. The question is—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses to

28th January 1956] [Mr. Speaker]

consider the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Bill, 1956, and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. A. Manickavelu.
" C. Subramaniam.
Sri K. Rajaram.
" M. S. Mogral.
" G. Narayanaswami Naidu.
" R. S. Arumugam.
" A. Vaikuntam.
" V. R. Nagarajan.
" S. Panchaksharam.
" P. B. K. Rajachidambaram.
Sri A. Sambasivam.
" P. G. Karuthiruman.
" C. Kandasamy.
" S. Ramalingam.
" S. S. Kolkebail.
" M. Dharmalingam.
" S. Swayamprakasam.
" M. Kandaswamy Kandar
" M. Manickasundaram.
" D. Dasarathan.

The motion was put and carried.

VI.—ANNOUNCEMENT *RE* ELECTION OF ONE MEMBER TO THE BOARD OF INDUSTRIES.

MR. SPEAKER : I have to announce to the House that the following two members were duly nominated for the election to the Board of Industries :—

1. Sri A. S. Subbaraj.
2. Sri A. Ratnam.

As the number of candidates exceeds the number of vacancies to be filled, viz., one, a poll will be taken in the room of the Assistant Secretary to the Assembly on Monday, the 30th January 1956 between the hours of 10 a.m. and 1 p.m.

The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 30th January 1956.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

1. *Notification issued with G.O. No.* 3626, *Revenue, dated* 24*th November* 1956, *amending the annexure to the Malabar Tenancy (Determination of Fair Rent) Rules,* 1954. [*Laid on the table under section* 57 (3) *of the Malabar Tenancy Act,* 1929.]

2. *Notification issued with G.O. Ms. No.* 3963, *Public (Services), dated* 16*th December* 1955, *amending the Madras Public Service Regulations,* 1954, *by including within the Commission's purview the temporary post of Mathematics Assistant in the Central Designs Office, Public Works Department, in the Madras Educational Subordinate Service.* [*Laid on the table under Article* 320 (5) *of the Constitution of India.*]

3. *Notification issued with G.O. Ms. No.* 3568, *Home, dated* 22*nd December* 1955, *remitting the court-fees in appeals presented to Settlement Officers and the Director of Settlement against the orders passed in regard to the grant of ryotwari pattas.* [*Laid on the table under section* 82 (2) *of the Madras Court fees and Suits Valuation Act,* 1955.]